# உதயன்

சுடர் : 36 | கதிர் : 255 | செவ்வாய்க்கிழமை | ஆடி 25 ஆம் நாள் 10 ஓகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 | விலை: 30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111




பாடசாலைகளை மீளத்திறப்பது சாத்தியமில்லை

(பக்கம் 07இல்)

## அத்தியாவசிய தேவை தவிர,

# வீட்டைவிட்டு வெளியேறாதீர்!

### வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் பொதுமக்களுக்கு அவசர எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 10

வடக்கு மாகாணத்தில் சில வாரங்களாக கொரோனாத் தொற்று அதிகரித்து, கொரோனா நோயாளிகளும் பெரும் எண்ணிக்கையில் இனங்காணப்படுகின்றார்கள். இது ஆபத்தான விடயம். எனவே, பொதுமக்கள் அத்தியாவசிய தேவைதவிர வேறு எந்தக் காரணத்துக்காகவும் வீட்டைவிட்டு வெளியே வராதீர்கள்.

19 >

## ஒரு மாதத்துக்கு கவனமாக இருங்கள்

### இராணுவத்தளபதியும் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 10

"இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளதால் ஆபத்தான கட்டத்தில் இருக்கின்றோம். அடுத்த ஒரு மாத காலம் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். எனவே, அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சுகாதார விதிமுறைகளை அனைவரும் கட்டாயம் பின்பற்ற வேண்டும்." இவ்வாறு கொரோனாத்

19 >

## நாட்டை முடக்காவிடின் ஏனைய சிகிச்சைகள் முடங்கும்

### மருத்துவ சங்கம் கடும் எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 10

"கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வேகமான அதிகரிப்பு காரணமாக மருத்துவமனைகளின் செயற்பாடுகளில் தடங்கல் நிலை ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. மருத்துவமைனைகளில் பெருமளவில் ஒட்

19 >

## வல்வெட்டித்துறை தவிசாளருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஓக. 10

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் கோணலிங்கம் கருணானந்தராசாவுக்கு

19 >

## வளர்ப்புநாய் உயிரிழந்த துயரால் இறந்த பெண்ணுக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஓக. 10

வட்டுக்கோட்டையில் மயங்கியநிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பெண் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

மூளாய் வீதி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கணேசலிங்கம்ஜெயமலர் (வயது 61) என்பவரே உயிரிழந்த

14 >



## கொரோனாவால் யாழில் ஐவர் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 10

யாழ்ப்பாணத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 5 பேர் கொவிட்19 நோய்த்தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த குருநகரைச்

19 >

## ஆசிரியர்களின் பிரச்சினையை தீர்க்க குழு அமைப்பு

கொழும்பு, ஓக. 10

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், ஆராய்ந்து

19 >

## எந்நேரமும் நாடு முடக்கப்படலாம்

### பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 10

நாட்டை முடக்கத் தீர்மானிக்கப்படவில்லை என்றாலும், நிலைமைகளைப் பொறுத்து ஒரு சில மணித்தியாலங்களில் தீர்மானங்கள் மாறலாம் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் நாடு முடக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் சுகாதாரத் தரப்பினரால் முன்வைக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

14 >

## ஒரே நாளில் 111 பேரை சாகடித்த கொரோனா!

### பேரச்சத்தில் உறைந்துள்ள மக்கள்

கொழும்பு, ஓக. 10

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் ஒரே நாளில் 111 பேர் உயிரிழந்துள்ளனர். இதுவே நாட்டில் நாளொன்றில் பதிவான அதிகூடிய கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கையாகும். நேற்றுமுன்தினம் உயிரிழந்த 111 பேரில் 56

14 >

## குளவிகொட்டி ஒருவர் சாவு

தருமபுரம், ஓக. 10

குளவிக்கொட்டுக்கு இலக்கான குடும்பத்தலைவர், சிகிச்சை பெறச் செல்லாதநிலையில் நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

19 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# சம்பளமுரண்பாடு, சட்டவரைவுக்கு எதிராக யாழ்ப்பாணம், பருத்தித்துறையில் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஓக. 10**

**சம்பள முரண்பாடு மற்றும் சேர்.ஜோன் கொத்தலாவல சட்டவரைவுக்கு எதிராக யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறையில் நேற்று ஊர்வலமும் கவனவீர்ப்புப் பேரணியும் நடைபெற்றன. நாடு முழுவதும் ஆசிரிய தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் குறித்த இரு இடங்களிலும் போராட்டங்கள் நடைபெற்றன.**

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் முற்றவெளியிலிருந்து ஆரம்பித்து வாகனப் பேரணி யாழ்.நகர வீதி ஊடாக யாழ். மாவட்ட செயலகத்தை சென்றடைந்து நிறைவடைந்தது.

வாகன பேரணி ஆரம்பமாகி நகரை அடைந்தபோது, பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர் குறித்த பேரணியை நடத்த முடியாது என தடுத்து நிறுத்த முட்பட்டனர். எனினும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தனியாள் இடைவெளி பேணியே போராட்டம் நகர்கின்றது என்று தெரிவித்தவாறு போராட்டத்தைத் தொடர்ந்தனர். அதில் சுமார் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**பருத்தித்துறை**

பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது. வடமராட்சி வலய இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தினர் மற்றும் அதிபர் சங்கத்தினர் ஆகியோர் என சுமார் 100 பேர் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை நகரிலிருந்து பேரணியாக ஆரம்பமாகிய போராட்டம் பருத்தித்துறை நவீன சந்தை சுற்று வீதியால் பேருந்து தரிப்பு நிலையத்தை வந்தடைந்து போராட்டம் நிறைவுற்றது.

ஆர்ப்பாட்டத்தின்போது, "சம்பள உயர்வை கேட்கவில்லை எமது சம்பளத்தையே கேட்கிறோம், பிள்ளைகளின் கல்வியை சிதைக்காதே, கல்வியை உறுதிப்படுத்தி ஆசிரியர் அதிபர் சம்பள முரண்பாட்டை தீர்த்துவை, இலங்கை கல்வியை இராணுவ மயமாக்காதே, 24 வருடங்களாக நீடிக்கும் ஆசிரியர் அதிபர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு வழங்கு, ஆசிரியர், மாணவர்கள் சிறுவர்கள், பெற்றோர்களை துன்புறுத்துகின்ற கல்வி நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வை வழங்கு, இல்லாதுசெய்த எமது சம்பளத்தை எமக்குத் தா" உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

போராட்டத்தில், வடமராட்சி வலய ஆசிரியர், அதிபர்களின் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 14 சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-20,26)

7 பேருக்கு வரணியில் தொற்று

# இன்று அன்டிஜென்

தென்மராட்சி, ஓக. 10

தென்மராட்சி வரணியில் நால்வருக்குக் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வரணி இடைக்குறிச்சியை சேர்ந்த 70 வயது முதியவர் ஒருவருக்கும் வரணி இயற்றாலையில் தாய்க்கும் மகளுக்கும், தாவளை இயற்றாலையில் கர்ப்பிணி ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், வரணி மக்கள் சுகாதார நடைமுறைகளை கடுமையாகப் பின்பற்றி சமூகத்தில் தொற்று பரவலை தடுக்க வேண்டும் என சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன் வரணி சமுர்த்தி வங்கியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. கடந்த 20ஆம் திகதிக்குப் பின்னர் சமுர்த்தி வங்கியில் சேவைபெற்றவர்களும் வெளிமாவட்டங்களிலிருந்து இரு வார காலப்பகுதிக்குள் வரணி பிரதேசத்துக்கு வருகைதந்தவர்களும் பரிசோதனையில் கலந்துகொள்ளுமாறு சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர். (த-159)

வவுனியாவில்

# உள்ளூராட்சி சபைகளுக்கு புதிதாக இரு உறுப்பினர்கள்

வவுனியா, ஓக. 10

வவுனியா நகரசபை மற்றும் செட்டிகுளம் பிரதேச சபை என்பனவற்றுக்கு புதிதாக ஒவ்வொரு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எப்பின் வவுனியா நகர சபை மற்றும் செட்டிகுளம் பிரதேச சபையின் உறுப்பினர்கள் இருவர் பதவி விலகியமையை யடுத்து ஈ.பி.ஆர்.எல்.எப்பின் செயலாளர் ந.சிவசக்தி ஆனந்தன் மேற்குறித்த உறுப்பினர்கள் இருவரையும் பரிந்துரைத்தார். அதன்படி வவுனியா மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது.

அதற்கமைய வவுனியா நகரசபைக்கு திருமதி நிருபா சச்சிதானந்தனும் செட்டிகுளம் பிரதேச சபைக்கு பூலோகம் இந்திரனும் சட்டத்தரணி துரைசிங்கம் ஜெயானந்தன் முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். (த-110)

# வீட்டிலிருந்தே இறைவனை வழிபடுங்கள்

*பிரதேச செயலர் அறிவுறுத்து*

யாழ்ப்பாணம், ஓக. 10

பக்தர்கள் வீடுகளிலிருந்தவாறே சந்நிதியானை நினைத்து வழிபடுமாறு வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வார்ப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார். அவர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

செல்வச்சந்நிதி பகுதியில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் அயற்கிராமங்களிலும் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற உற்சவ கால ஒழுங்கமைப்புக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு இந்த வருடம் மஹோற்சவம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. கோவில் உள்வீதியில் மட்டுமே பூஜைகள் மற்றும் சமய நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வெளிப்புறச் சூழலில் சமய நிகழ்வுகள் கலைநிகழ்வுகள் மற்றும் நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல் என்பவற்றுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. விசேட போக்குவரத்துச் சேவைகளும் நடைபெறமாட்டாது. வெளியூர் பக்தர்கள் கலந்துகொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மதத்தலைவர்கள் உட்பட 100 அடியார்களே உரிய நேரத்தில் வழிபாடு செய்வதற்கு அனுமதிக்கப்படுவர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (த-26)



# புதுக்குடியிருப்பு சந்தையில் 7 பேருக்குக் கொரோனா

*3 நாள்களுக்கு சந்தை மூடப்பட்டது*

முல்லைத்தீவு, ஓக. 10

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை நேற்றுத் தொடக்கம் மூன்று நாள்களுக்கு மூடப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது இதுவரை 7 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதனையடுத்து பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமைய சந்தை மூடப்பட்டது. தொற்றாளர்களாக இனங்காணப்பட்ட நபர்கள், பலருடன் தொடர்புபட்டிருந்தனர் என்பது தெரியவந்துள்ளமையால் மேலும் பலர் தொற்றாளர்களாக இனங்காணப்பட வாய்ப்புள்ளது என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

எனவே, பொதுமக்கள் நோய்த் தொற்றைத்தடுக்க பொதுச்சந்தைக்கு செல்வதை தவிர்க்குமாறும், அத்தியாவசியத் தேவை தவிர, வெளியில் செல்வதை தவிர்த்து, கூட்டுச்சேராமல் சுகாதார நடைமுறைகளைப்பின்பற்றி வீட்டில் இருக்குமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, நாளை புதன்கிழமை புதுக்குடியிருப்பு சந்தை வணிகர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

இவைமட்டுமன்றி, முல்லைத்தீவு சந்தையில் வணிகர் ஒவருக்கும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக திட்டமிடல் கிளையில் உத்தியோகத்தர் ஒருவருக்கும் கொரோனாத்தொற்று இனம்காணப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-19,115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வீதிகளில் செத்து மடியலாம்

## நாட்டை உடன் முடக்குமாறு எதிர்க்கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஓக. 10

**கொரோனாத் தொற்றால் மக்கள் வீதிகளில் செத்து மடியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, நாட்டை உடனடியாக முடக்க வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் கட்சியின் உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வுகளை முன்வைப்பதற்கு இந்த அரசு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கொரோனாவால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக நாட்டை உடன் மூடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் இறப்பவர்கள் தொடர்பில் உண்மையான தகவல்களை வெளிப்படுத்துமாறு அரசை வலியுறுத்துகின்றோம். அதேபோன்று மருத்துவமனைகளில் நிலவும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்கி, மருத்துவமனைக் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கான துரிதகதி வேலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் மக்கள் நடுவீதியில் செத்து மடியும் அபாய நிலைமை ஏற்படும் - என்றார். (4.44)



## கொரோனா பாணி தயாரித்த தம்பிக்க தடுப்பூசி பெற்றார்!

கொழும்பு, ஓக. 10

கொரோனாவுக்கு ஒரு வகையான பாணியைத் தயாரித்து பிரபலமான தம்மிக்க பண்டார, தற்போது கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுள்ளார்.

கேகாலையைச் சேர்ந்த நாட்டு மருத்துவரான தம்மிக்க பண்டார, தனது கனவில் காளியம்மன் வந்து பாணி மருந்தைத் தயாரிக்குமாறு தெரிவித்தார் என்று கதையளந்தார். அவர் தயாரித்த பாணியை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மற்றும் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் பருகியிருந்தனர். மக்கள் சிலருக்கும் இலவசமாக வழங்கினார்.

தடுப்பூசியை ஏற்றுவதற்கு முன்னரே இந்தப் பாணியை அவர்கள் பருகியிருந்தனர்.

எனினும், அவர்களில் சிலருக்கு கொரோனா தொற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறிருக்க, தம்மிக்க பண்டார, கொரோனாத் தடுப்பூசியை ஏற்றிக்கொண்ட படம் சமூக வலைத்தளத்தளங்களில் தற்போது வைரலாகியுள்ளது. அந்தப் படத்துக்கு கீழே, 'இவ் வருடத்துக்கான சிறந்த படம்' என்று பலரும் கருத்துக்களைப் பதிவிட்டுள்ளனர். (4)

## பைசர் தடுப்பூசிகள் 100,000 வந்தடைவு!

கொழும்பு, ஓக. 10

அமெரிக்காவிலிருந்து மேலும் ஒரு லட்சம் டோஸ் பைசர் தடுப்பூசிகள் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தன.

அமெரிக்காவிலிருந்து, கட்டார் வழியாக எடுத்து வரப்பட்ட தடுப்பூசிகள் நேற்று அதிகாலை 2.15 மணியளவில், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வேதச விமான நிலையத்தை வந்தடைந்தன என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (4)



### சிறுவர்களுக்கு

## கடுமையான அறிகுறியெனில் மருத்துவமனைக்கு செல்லுங்கள்

### பெற்றோருக்கு ஆலோசனை

கொழும்பு, ஓக. 10

சிறுவர்களுக்கு அதிக காய்ச்சல், உணவு மற்றும் பானம் உட்கொள்ள இயலாமை, வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தி போன்ற கடுமையான அறிகுறிகளை அனுபவித்தால் மருத்துமனைக்கு அழைத்துச்செல்ல வேண்டும் என்று சிறுவர் மருத்துவர் நளின் கிதுல்வத்த தெரிவித்துள்ளார்.

தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து, 45 ஆயிரம் சிறுவர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 20 ஆயிரம் பேர் 10 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்துகின்றன. அத்துடன் 14 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். தற்போது அறிகுறியற்ற மற்றும் இலகுவான அறிகுறிகளை கொண்ட தொற்றாளர்களுக்கு, வீட்டு அடிப்படையிலான தனிமைப்படுத்தல் மற்றும் மேலாண்மைக்கான வழிகாட்டுதல்களை சுகாதார அமைச்சு கடந்த வாரம் வெளியிட்டது. இந்த வழிகாட்டுதல் சிறுவர்களுக்கும் பொருந்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

## சுகாதார ஊழியர்களுக்கு முதலில் பூஸ்டர் தடுப்பூசி

கொழும்பு, ஓக. 10

சுகாதார ஊழியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசியின் மூன்றாவது டோஸாக பூஸ்டர் தடுப்பூசியை முதற்கட்டமாக செலுத்த சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார ஊழியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டாலும், தடுப்பூசி போடப்பட்டவர்களில் சிலருக்கு கொரோனா தொற்றியுள்ளமை தெரியவந்துள்ளது. இதனால் அவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் சுகாதார ஊழியர்களுக்கு கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியின் முதல் டோஸும், இரண்டாவது டோஸ் கடந்த ஏப்ரல் மாதமும் செலுத்தப்பட்டது.

கொரோனாக் கட்டுப்பாட்டில் நேரடியாக ஈடுபட்டுள்ள சுகாதார ஊழியர்களின் ஆரோக்கியத்தை தொடர்ந்து கண்காணிப்பது முக்கியம். அதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (4)




## பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அரச ஊழியர்களை கைவிடவில்லை

### அமைச்சர் பெருமிதம்

கொழும்பு, ஓக. 10

கொரோனாத் தொற்றால் நாடு பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ள போதும், அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய சலுகைகள் உரிய காலத்தில் வழங்கப்படுகின்றன என்று பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அமரபுர மாநாயக்க தேரர் தொடம்பஹல சந்திரசிறி தேரரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்ற பின்னர், அமைச்சர் சரத் வீரசேகர இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் நாடு என்ற ரீதியில் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்துப் பயணிக்காவிடின் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்று அமரபுர மாநாயக்க தேரர், அமைச்சருக்கு ஆலோசனை வழங்கினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

வைரஸ் தாக்கத்தில் இருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்கவும், பொருளாதார நிலைமையைச் சீர்செய்யவும் அரசு ஆரம்பத்திலிருந்து பொறுப்புடன் செயற்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் தேசிய பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

பொருளாதாரம் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது என்ற காரணத்தால் அரச ஊழியர்களுக்கு வழங்கும் மாதச்சம்பளம் மற்றும் ஏனைய சலுகைகள் ஆகியவற்றில் எவ்வித தாமதமும் ஏற்படவில்லை. உரிய காலத்தில் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் ஒரு தரப்பினர் குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். அனைத்துத் தரப்பினருக்கும் பொருளாதார நெருக்கடி காணப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். - என்றார். (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### உருத்திரபுரம் நீவில் கிராமத்தில்

# சட்டவிரோதமாக பனைகள் அழிப்பு

## கட்டுப்படுத்துமாறு பொதுஅமைப்புக்கள் கோரிக்கை



**கிளிநொச்சி, ஓக. 10**

**கிளிநொச்சி - உருத்திரபுரம் நீவில் கிராமத்தில் உள்ள வயல் நிலங்கள் மற்றும் பொது மக்களின் காணிகளில் சட்டவிரோதமான முறையில் பனை மரங்கள் வெட்டப்படுகின்றன என்று கிராமத்தின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

'நீவில் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வைத் தொடர்ந்து தற்போது பெறுமதிமிக்க பனை மரங்கள் இயந்திரங்கள் மூலம் வெட்டப்பட்டு வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

இது தொடர்பில் பல தடவைகள் பலரின் கவனத்துக்கு கொண்டுசென்ற போதும் எவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

அத்துடன் நேற்றுமுன்தினம் வெட்டப்பட்ட பனை மரங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்த போதும், பனைமரங்கள் வெட்டப்படுவது தொடர்பில் பொலிஸ் நிலையம் வந்து முறைப்பாடு பதிவு செய்யுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத பனை மரங்கள் வெட்டப்படுவது தொடர்பில் யார்மீது முறைப்பாடு செய்வது, என்பது தெரியாத நிலையிலும் அதனை கட்டுப்படுத்த முடியாத நிலையிலும் கிராம மக்கள் உள்ளனர் -என்றனர். (ஐ-214)



## மன்னாரில் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக களப்பயணம்

மன்னார், ஓக. 10

மன்னாரில் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் களப்பயணம் ஒன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் மன்னார் விவசாய திணைக்களத்தினர் மன்னார் மாந்தை மேற்கு பிரதேசத்தின் பல பகுதிகளுக்கும் இந்தக் களப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

மன்னாரில் தற்போது செய்கை பண்ணப்பட்டவரும் உப உணவு பயிர்ச்செய்கை, சேதனப்பசளை தயாரிப்பு போன்ற விடயங்களை பார்வையிட்டதுடன், அது தொடர்பான விழிப்புணர்வுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்த களப் பயணத்தில் அருட்தந்தையர்கள், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர், விவசாய திணைக்களத்தின் போதனா ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-213)




### வவுனியா நகர் முழுவதும்

## கொத்தலாவல பிரேரணைக்கு எதிராக பல சுவரொட்டிகள்

வவுனியா, ஓக. 10

வவுனியா நகரின் பல பகுதிகளில் 'இலவசக் கல்வியை சீரழிக்கும் கொத்தலாவல பிரேரணையை சுருட்டிக்கொள்' என்ற வசனங்களை தாங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்தச் சுவரோட்டிகளின் கீழ்ப்பகுதியில் கொத்தலாவல பிரேரணைக்கு எதிரான கூட்டு நிலையம் எனவும் உரிமம் கோரப்பட்டுள்ளதுடன், தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் இச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

வவுனியா நகரின் குறிப்பாக நூலக வீதி, ஏ9 வீதி, புகையிரத நிலைய வீதி, மன்னார் வீதி, நகர் மத்தி மற்றும் ஹொரவப்பொத்தானை வீதி ஆகிய பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ஐ-18)

## நாட்டுக்குத் தேவையான எரிவாயு கையிருப்பில்

### லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு



கொழும்பு, ஓக. 10

நாட்டுக்குத் தேவையான எரிவாயுவை வழங்கும் திறன் எங்களிடம் உள்ளது என்று லிட்ரோ காஸ் நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் மாதத்துக்குத் தேவையான எரிவாயு இருப்புகளை இறக்குமதிசெய்ய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய அறிக்கைகள் பொறுப்புடன் செய்யப்படுகின்றன. கடந்த பத்து நாள்களில் மட்டும், நாட்டில் உள்ள நுகர்வோருக்கு 95 ஆயிரத்துக்கும் அதிகமான உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களை வழங்கியுள்ளோம்.

இது அதிகம். ஏனெனில் இலங்கையில் நாளாந்த உள்நாட்டு எரிவாயு தேவை 90 ஆயிரம் முதல் 95 ஆயிரம் சிலிண்டர்களாகக் காணப்படுகின்றது. எரிவாயு நெருக்கடிக்கு முதல் நாள், எங்கள் நிறுவனம் மட்டும் 80 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்களை நுகர்வோருக்கு வழங்கியது. எனவே நாட்டில் எரிவாயு நெருக்கடி ஏற்படாது. -என்றார். (ம-4)

## உற்பத்தியை மேற்கொள்ளாதவிடத்து வைப்புப் பணத்தை மீளச்செலுத்துக

### லாப் எரிவாயு நிறுவனத்துக்கு காலக்கெடு

கொழும்பு, ஓக. 10

லாப் எரிவாயு நிறுவனம் சமையல் எரிவாயுவை சந்தைக்கு விநியோகிக்காவிட்டால், நுகர்வோர் சிலிண்டரை பெற்றுக்கொள்வதற்காக செலுத்திய, வைப்புப் பணத்தை மீளச் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நுகர்வோர்உரிமைகளைப்பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் ரன்ஜித் விதானகே, வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் அவர் தெரிவிக்கையில்,

லாப் நிறுவனத்தின் நடவடிக்கையால் ஆயிரக்கணக்கான சமையல் எரிவாயு நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த நிறுவனம் தொடர்ந்தும் சமையல் எரிவாயு உற்பத்தியை மேற்கொள்வதில்லை என்றால், நுகர்வோரால் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட எரிவாயு சிலிண்டரை மீண்டும் பெற்றுக்கொண்டு,சிலிண்டருக்காக நுகர்வோர் வைப்பிலிட்ட பணத்தை மீண்டும் அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போதைய இக்கட்டான நிலைமையில் நுகர்வோருக்கு, மீண்டும் பணம் வைப்பிலிட்டு, வேறு நிறுவனத்தில் சமையல் எரிவாயு சிலிண்டரைக் கொள்வனவு செய்ய முடியாது. -என்றார். (ம-4)


## பொலிஸ் சேவைக்கு ஆள்சேர்ப்புக்கான நேர்முகத் தேர்வு

வவுனியா,ஒக.10

இலங்கை பொலிஸ் சேவைக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத் தேர்வு வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

குறித்த நேர்முகத் தேர்வில் வட மாகாணத்தைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாரும் என 150 க்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் கலந்துகொண்டனர்.

இவர்களில் [illegible] பொலிஸ்கொஸ்தாபல் மற்றும் [illegible] பதவிகளுக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். (ஐ-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தென்மராட்சி பிரதேச செயலக மற்றுமொரு அலகும் முடக்கம்

தென்மராட்சி, ஓக. 10

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் மற்றொரு அலகும் நேற்று சாவகச்சேரி சுகாதார பகுதியினரால் முடக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக தாபனக் கிளையில் கடமையாற்றும் வடமராட்சியைச் சேர்ந்த பெண் அலுவலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து குறித்த அலகு முடக்கப்பட்டதுடன், அங்கு பணியாற்றிய 20க்கும் மேற்பட்ட அலுவலர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

ஏற்கனவே பிரதேச செயலக திட்டமிடல் அலகு, சமுர்த்தி அலகு, நிதி அலகு மற்றும் வெளிக்கள அலுவலர்கள் அலகு போன்றவை முடக்கப்பட்டு 14 நாள்களின் பின்னர் இயங்கியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

கோரிக்கைக்குத் தீர்வு கிடைக்கும்வரை

# கற்பித்தல் நடவடிக்கையிலிருந்து முழுமையாக விலகத் தீர்மானம்!

## ஒன்றிணைந்த ஆசிரியர் சங்கங்கள் அறிவிப்பு




வவுனியா, ஓக. 10

**ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பான போராட்டங்கள் முடிவுறுத்தப்படும் வரை அனைத்து விதமான கற்றல், கற்பித்தல் பணிகளிலிருந்தும் தற்காலிகமாக ஒதுங்கியிருப்பதாக வவுனியா மாவட்ட ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.**

இது தொடர்பாக வவுனியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள்,

சம்பள முரண்பாடு தொடர்பான போராட்டங்கள் வலுப்பெற்றுவரும் சந்தர்ப்பத்தில் வவுனியா மாவட்டத்திலும் சகல தொழிற்சங்கங்களும் இணைந்து ஒரு சம்மேளனத்தை உருவாக்கியுள்ளோம். அதனூடாக போராட்டத்தை வலுவுடையதாக மாற்றவேண்டிய தேவை எமக்குள்ளது. குறிப்பாக இரண்டு தசாப்பதங்களுக்கு மேலாக ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்ந்து வருகின்றது. ஆட்சிக்குவரும் அனைத்து அரசுகளும் அதனை தீர்க்காது தட்டிக்கழித்து வந்துள்ளன. நாம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வந்திருக்கின்றோம். இந்த சந்தர்ப்பத்திலே எமது சம்பள முரண்பாடு தீர்க்கப்படும் வரை பாடசாலையின் சகல விடயங்களையும் புறக்கணிப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

குறிப்பாக பாடசாலையில் தினசரி வரவுகளை உறுதிப்படுத்தாது இருத்தல், தொலைபேசி மூலமாகவோ பிறமார்க்கங்கள் மூலமாகவோ கோரப்படும் தகவல்களை வழங்காதிருத்தல், கடமைநேரத்தில் பாடசாலைக்கு செல்லாதிருத்தல், இணையவழி கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருத்தல், போராட்டம் முடியும் வரை வீடுகளில் இருந்து பணியாற்றாமல் இருத்தல், ஆகிய தீர்மானங்களை இனிவரும் காலங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொவிட் சூழலை கருத்தில் கொண்டு எமது போராட்ட வடிவங்களை மாற்றியுள்ளோம் என்றனர். குறித்த ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவைசங்கம், அதிபர் சங்கம், இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கம் மற்றும் ஏகாபத்த குருசேவா சங்கம் ஆகியவை கலந்துகொண்டன. (ஐ-110)



## சிறு மழைக்கே தாக்குப்பிடிக்காத முல்லைத்தீவு சந்தையின் நிலை

முல்லைத்தீவு, ஓக. 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் பெய்த மழை காரணமாக முல்லைத்தீவு சந்தையின் வணிகர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள முல்லைத்தீவு நகரப்பகுதிச் சந்தையிலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. சந்தையின் கட்டட கூரை சரியாக காணப்படாத காரணத்தால் மழைநீர் உட்புகுகின்றது என்றும், இது குறித்து பிரதேச சபைக்கு பல தடவைகள் சொல்லியும் இதுவரை சீர் செய்து கொடுக்கப்படவில்லை என்றும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-19)

வவுனியா மாவட்டத்தில்

## 82 வீதமானோருக்கு முதலாவது டோஸ்

வவுனியா, ஓக. 10

வவுனியா மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட 82.42 வீதமானவர்களுக்கு முதலாவது டோஸ் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட 98 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்ற நிலையில், அவர்களில் 80 ஆயிரத்து 770 பேருக்கு முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. அத்துடன் வடக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் யாழ்ப்பாணத்தில் 75.74 வீதமும், கிளிநொச்சியில் 79.29 வீதமும், முல்லைத்தீவில் 75.83 வீதமும், மன்னாரில் 69.74 வீதமானோருக்கும் முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-18)



## 2,953 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, ஓக. 10

இலங்கையில் மேலும் 2 ஆயிரத்து 953 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 32 ஆயிரத்து 947 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 161 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 95 ஆயிரத்து 518 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (-22)

# எரிபொருளை பெற்றுக்கொள்ள நீண்டதூரம் பயணிக்கும்நிலை

மன்னார், ஓக. 10

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகப்பிரிவில் உள்ள பெரியமடு பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் இல்லாமையால் பல கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விடத்தல்தீவு, பள்ளமடு, இலுப்பைக்கடவை, பெரியமடு, சன்னார், [illegible] ஈச்சளவக்கை, சூராய் உட்பட 10க்கும் மேற்பட்ட கிராம மக்களே பாதிக்கப்படுகின்றார்கள். பெரியமடு, சன்னார் போன்ற பகுதிகளிலுள்ள மக்கள் எரிபொருள்கள் நிரப்புவதற்கு 20 கிலோமீற்றர் தூரத்திலுள்ள திருக்கேதீச்சரம் அல்லது மன்னார் நகருக்கு வரவேண்டியுள்ளது.

அனைத்து நேரங்களிலும் கிராமத்து கடைகளில் எரிபொருள்கள் இருப்பதில்லை. இருந்தாலும் விலை அதிகம்.

திடீரென ஒரு சிக்கல் ஏற்படும்பொழுது மருத்துவமனைகளுக்கு நோயாளிகளை கொண்டுசெல்ல முடியாதநிலை காணப்படுகின்றது. எனவே, பெரியமடு பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை அமைக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (து-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையை அழித்தால் இனி கடும் நடவடிக்கை



**கொழும்பு, ஓக. 10**
**நாட்டின் இயற்கையையும், இயற்கை வளங்களையும் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. காடழித்தல் மற்றும் மணல் கொள்ளை ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், சுற்றாடலைப் பாதுகாக்க ஓர் அரசு என்ற ரீதியில் எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். கடந்த காலத்தில் காடழித்தல் மற்றும் மணல் அகழ்தல் போன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாதிருந்தமையை ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது அந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியுள்ளோம்.

அரசியல் கட்சிகள், அரசியல் அதிகாரம் மற்றும் ஏனைய தராதரங்களை பாராது இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக நீதியை நிலைநாட்டும் அதிகாரம் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

இவ்வாறான அழிவுகளை ஏற்படுத்தியவர்களை சட்டத்தின் முன் நிறுத்தியுள்ளோம்.

பலருக்கு தண்டனைகளையும் பெற்றுக் கொடுத்துள்ளோம். மணல் அகழ்வும் செயற்பாடுகளும், மரம் வெட்டும் நடவடிக்கைகளும் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்காலத்திலும் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நாட்டின் இயற்கை மற்றும் இயற்கை வளத்தைப் பாதுகாப்பதில் அரசு உறுதியாக அர்ப்பணிப்புடன் பணியாற்றும். -என்றார். (4)

## அஹ்னாஃப் ஜசீமை சந்திக்க சட்டத்தரணிகளுக்கு அனுமதி



கொழும்பு, ஓக. 10
பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆசிரியரும், கவிஞருமான அஹ்னாஃப் ஜசீமை சந்திக்க, அவரது சட்டத்தரணிகளுக்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

இவர் நவரசம் எனும் நூல் ஊடாக மாணவர்களை தீவிரவாத சித்தாந்தங்களைப் பின்பற்றுபவர்களாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

பொலிஸில்தடுத்துவைத்திருக்கும் தன்னை விடுவிக்கக்கோரி அஹ்னாஃப் ஜசீம் தாக்கல்செய்த அடிப்படை உரிமை மனு, நீதிபதிகளான முர்து பெர்னாண்டோ, யசந்த கோடகொட மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகளால் போமுன்வைக்கப்பட்ட விடயங்களைப் பரிசீலித்த நீதிபதிகள் குழாம், அஹ்னாஃப் ஜசீமை சந்திக்க அனுமதிக்குமாறு, சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (4)

## பதவியேற்கின்றார் மிலிந்த மொரகொட

கொழும்பு, ஓக. 10
இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினத்தன்று, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட பதவியேற்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனாவால் உலக நாடுகள் இலங்கையை சிவப்பு வலய நாடாக அறிவித்துள்ள நிலையில், அந்த நாடுகளுடன் தொடர்பை வலுப்படுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி, வெளிநாட்டு அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த வெளிநாட்டு அலுவலகள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவுக்கான தூதுவர் எதிர்வரும் 15ஆம் திகதி பதவியேற்பார் என்று தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஒஸ்டின் பெர்னாண்டோ தூதுவர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர், புதிய தூதுவரை நியமிப்பதில் இழுபறியான நிலைமைகள் காணப்பட்டன.

குறிப்பாக மிலிந்த மொரகொடவை ஒரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அதிகாரங்களுடன் நியமிக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கரிசனை கொண்டிருந்தார்.

மிலிந்த மொரகொட 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி எழுதிய கட்டுரையை அடுத்து, அவரது நியமனத்துக்கு இந்தியத் தரப்புக்கள் பச்சைக்கொடி காட்டுமா என்ற நிலைமைகளும் ஏற்பட்டிருந்தன. எனினும் உயர்பதவிகளை நியமிப்பதற்கான நாடாளுமன்றக் குழு மொரகொடவின் பெயரை அங்கீகரித்தது.

இதனையடுத்து டெல்லிக்கு அவருடைய பெயர் முன்மொழியப்பட்ட நிலையில் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

அதனையடுத்து அவர் இந்திய இலங்கை உறவுகளை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பான பரிந்துரைகளை அறிக்கையாக ஜனாதிபதியிடத்தில் கையளித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் தற்போது அவர் உத்தியோக பூர்வமாக பதவி ஏற்கவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4)



## ஆலயத்தின் கோபுர வாசலில் பாதணிகளுடன் பொலிஸார்

### வலுக்கின்றது எதிர்ப்பு

மட்டக்களப்பு,ஓக.10
இலங்கையின் வரலாற்று முக்கியத்தைப் பறைசாற்றும் புனித ஆலயத்தில் பாதுகாப்புக்காகச் சென்றுள்ள பொலிஸ் உத்தியோகத்தர், பாதணிகளுடன் நடமாடிமைக்கு இந்து ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

வரலாற்று புகழ்பெற்ற மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் கோபுர வாசலில் பாதணிகளுடன் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நடமாடியுள்ளார்.

தேசிய நல்லிணக்கம் பேசும் அரசு மற்றும் பாதுகாப்புப் பிரிவு இதற்கு நடவடிக்கை எடுக்குமா என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (4)

## எசல பெரஹரா நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஓக. 10
வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி எசல பெரஹரா நேற்றுக் காலை காப்புக் கட்டும் நிகழ்வுடன் ஆரம்பமானது.

4 தேவாலயங்களின் பிரதிநிதிகள் பங்கேற்புடன் காப்புக் கட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

எதிர்வரும் 23ஆம் திகதி எசல பெரஹரா விழா நிறைவடையும். எதிர்வரும் 12ஆம் திகதி வரை 4 தேவாலயங்களில் பெரஹரா நடைபெறும் என்று தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேல தெரிவித்துள்ளார்.


முதல் கும்பல் பெரஹரா எதிர்வரும் 13ஆம் திகதி வீதிகளில் அணிவகுத்து, 17ஆம் திகதி வரை ஐந்து நாள்கள் நடைபெறும். எதிர்வரும் 18ஆம் திகதி ரந்தோலி பெரஹரா கண்டி வீதிகளில் அணிவகுத்துச் செல்லும். எதிர்வரும் 22ஆம் திகதி அன்று பிரம்மாண்டமான ரந்தோலி பெரஹரா நடைபெறும்.

தண்ணீர் வெட்டும் விழா மற்றும் பகல் ஊர்வலம் எதிர்வரும் 23ஆம் திகதியன்று நடைபெறும்.

தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, பெரஹராவில் பங்கேற்கும் அனைத்துக் கலைஞர்களும் உயிர்ப் பாதுகாப்பு குமிழி முறைக்கு (பயோ பபுள்) உட்படுத்தப்படுவர்.

பெரஹராவின் செயற்பாடுகள் தொடர்பான மேலதிக முடிவுகள் சுகாதார ஆலோசனையின் அடிப்படையில் எடுக்கப்படும் என்று தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேல தெரிவித்துள்ளார். (4)

## 130 பேர் கைது



கொழும்பு,ஓக.10
சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றும் 130 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். [illegible] இதுவரை 53 ஆயிரத்து 701 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை மீறி மேல் மாகாணத்திலிருந்து வெளியேற அல்லது மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்க முற்பட்ட 56 வாகனங்கள் நேற்றும் திருப்பி அனுப்பப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஆள்வோர் செவிசாய்க்க வேண்டும்

தங்களது வேதன உயர்வைக் கோரி அதிபர்கள், ஆசிரியர்கள் சில வாரங்களாகப் போராட்டங்களை நடத்துகின்றனர். போராட்டத்தின் ஒரு பகுதியாக இணையவழிக் கற்பித்தலையும் அவர்கள் இடைநிறுத்தியிருக்கின்றார்கள். அதிபர்கள், ஆசிரியர்களின் போராட்டங்கள் தொடர்கின்றபோதும், அரசு அது தொடர்பாக நழுவல் போக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தப் போராட்டம் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும், அதிபர்கள், ஆசிரியர்களின் கோரிக்கையில் நியாயம் உள்ளது என்பதை மறுக்க முடியாது. நீண்ட காலமாக உள்ள சம்பள முரண்பாடுகளும், ஆட்சியில் இருந்தவர்கள், ஆட்சியில் இருப்பவர்கள் இந்த முரண்பாடுகளைச் சரி செய்ய வேண்டிய பொறுப்பைத் தட்டிக் கழித்தமையுமே இப்போதைய போராட்டங்களுக்குக் காரணம் என்பதும் உண்மை.

நீண்ட காலப் பொறுமைக்குப் பின்னர் அதிபர்களும், ஆசிரியர்களும் போராட்டத்தில் இறங்கியிருக்கின்றனர். தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்று அரசு கூறுகின்றது. அது உண்மையும் கூட. தற்போதுள்ள கொரோனா தொற்று நிலைமையில் நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் உள்ளது. அதேநேரம், பொருளாதார நெருக்கடியையும், கொரோனாத் தொற்று நிலைமையையும் காரணம் காட்டி அதிபர்கள், ஆசிரியர்களின் கோரிக்கைகளை ஒதுக்கிவிட்டும் செல்ல முடியாது.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய சாதக நிலைமைகள் தொடர்பாக அரசு ஆராய வேண்டும். வெறுமனே சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்று கூறிவிட்டு இருப்பது இந்தப் பிரச்சினையை மேலும் தீவிரமாக்கும். இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட போவது மாணவர்களே. இவை எதையும் கருத்தில் எடுக்காது வெட்டு ஒன்று துண்டு இரண்டு போன்று அரசு செயற்படுவது ஆரோக்கியமானது அல்ல. அதைப் போன்று அதிபர்கள், ஆசிரியர்கள் நடத்தும் போராட்டங்களைக் கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி அடக்குவதற்கும், கைதுகள் மூலம் அச்சுறுத்தி முடக்கி விடுவதற்கும் அரசு சிந்திக்குமானால் எதிர்மறையான விளைவுகளையே அவை ஏற்படுத்தும் என்பதையும் அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

அதிபர்கள், ஆசிரியர்கள் மேற்கொள்ளும் போராட்டம் தொடர்பாக எதிர்மறைக் கருத்துக்களைக் கூறுவோர், அவர்களின் போராட்டத்தில் உள்ள நியாயங்களையும் புரிந்துகொள்ள வேண்டும். நீண்ட காலமாக உள்ள இந்தப் பிரச்சினையில் போதியளவு அழுத்தத்தை ஆரம்பத்திலேயே கொடுக்காமையே இப்போதும் சம்பள முரண்பாடுகள் தொடர்வதற்குக் காரணமாயிருக்கின்றது. தற்போது நடத்தப்படும் ஆசிரியர்கள், அதிபர்கள் போராட்டம் தீர்வொன்றைப் பெற்றுத்தருமாக இருந்தால் எதிர்கால சந்ததிக்கும் அது பயன்மிக்கதாக இருக்கும். தற்போதைய போராட்டங்களால் மாணவர்களின் கல்வியில் பாதிப்புக்கள் ஏற்படுவதே உண்மையே. இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக விரைவாக முடிவுக்குக் கொண்டுவருவதற்குரிய அனைத்து அழுத்தங்களையும் அரசுக்கு வழங்க வேண்டியது அனைவரதும் கடமையே. அப்போதுதான் ஆசிரியர்கள், அதிபர்களின் கோரிக்கைகளுக்கு ஆள்வோர் செவிசாய்த்து, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் சீராகும்.



# செப்ரெம்பரில் பாடசாலைகளை மீளத்திறப்பது சாத்தியமில்லை!

### கல்வி அமைச்சர் அறிவிப்பு



**கொழும்பு, ஓக. 10**

**திட்டமிடப்பட்டவாறு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் பாடசாலைகளை மீளத் திறப்பது சாத்தியமில்லை என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர்களுக்கும், கல்விசாரா ஊழியர்களுக்கும் ஓகஸ்ட் மாதத்துக்குள் தடுப்பூசியை செலுத்தி முடிப்பதற்கு திட்டமிட்டிருந்தோம். அதன்பின்னர் செப்ரெம்பர் மாதம் முதல் வாரம், சுகாதாரத் தரப்பினரின் பரிந்துரைக்கமைய பாடசாலைகளை மீளத் திறப்பதே அரசின் எதிர்ப்பார்ப்பாக இருந்தது. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் பாடசாலையை திறக்கமுடியுமா என்பது கேள்விக்குறியே. எனவே, ஒன்லைன் மூலமான கல்வி நடவடிக்கை முக்கியத்துவம் பெறுகின்றது. அதனை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய சூழ்நிலையில், ஒன்லைன் கற்பித்தலில் ஈடுபடமுடியாது என்று ஆசிரியர்கள் கூறுவது அநீதியானது. இதனால் மாணவர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அதேவேளை, தடுப்பூசி பெறாத ஆசிரியர்களிடம் அதனை விரைவில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதேபோன்று 18 வயது முதல் 30 வயது வரையானோருக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இன்னும் இரண்டு வாரங்களுக்குள் ஆரம்பமாகும் - என்றார். (4,44)

### கொரோனாத் தொற்று நிலைமையில்

# சிறுவர்களை அழைத்துக்கொண்டு தனியார் கல்வி நிறுவனம் சுற்றுலா

### சுகாதாரப் பிரிவினர் விசாரணை

வவுனியா, ஓக. 10

கொரோனாத் தொற்று நிலைமையிலும் சிறுவர்களை சுற்றுலாவுக்கு அழைத்துச்சென்றதாக தெரிவிக்கப்படும் தனியார் கல்வி நிலையம் தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நாடு முழுவதும் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதுடன், தினசரி 50க்கும் மேற்பட்ட மரணங்களும் நிகழ்ந்த வண்ணமுள்ளன.

அத்துடன் மாகாணங்களுக்கு இடையிலான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டபோதிலும், அத்தியாவசிய தேவை நிமிர்த்தம் மட்டும் பயணங்களை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் ஆரம்பக் கல்வி நிறுவனம் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் நோக்கில் சிறுவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், என 50க்கும் மேற்பட்டவர்களை நுவரெலியா நோக்கி நேற்றுமுன்தினம் தனியார் பஸ்ஸில் அழைத்துச் சென்றுள்ளது.

நாட்டில் கொவிட் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் பொறுப்பற்ற விதமாக சுற்றுலாப் பயணத்துக்கு சிறுவர்களை அழைத்துச் சென்றமை தொடர்பில் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளதுடன், இவ்விடயம் தொடர்பில் சுகாதாரப் பிரிவினருக்கும் தெரியப்படுத்தினர். இதனையடுத்து குறித்த கல்வி நிலையத்தின் செயற்பாடு தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஜ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கொவிட்டால் அதிகரிக்கும் குழுந்தைத் திருமணங்கள்!

புதுடில்லி, ஓக.10
இந்தியாவில் தற்போது கொரொனாத் தொற்றுக் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் குழந்தை திருமணங்கள் அதிகரித்துள்ளன என்று அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பான அறிக்கையை நிலைக்குழு இந்திய நாடாளுமன்றத்தில் தாக்கல்செய்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளமையால் மாணவர்களுக்கு மன ரீதியான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பெற்றோர்கள் குழுந்தைகள் உறவில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. சமூக ரீதியாக பெண் குழந்தைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். பெண் குழந்தைகளுக்கு திருமணம் நடப்பது அதிகரித்துள்ளது.

ஆகையால் விரைவாக பாடசாலைகளை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் அனைத்து மாணவர்களுக்கும் தடுப்பூசிபோடும் திட்டங்களை விரைவாக கொண்டுவர வேண்டும்- என்றுள்ளது. (எ-இ)

# ஒரு குடும்பத்தின் தலையில் 2,63,976 ரூபா கடன் தொகை

## தமிழகத்தில் இந்த நிலைமை

**சென்னை, ஓக.10**
**தமிழகத்தில் ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் 2 லட்சத்து 63 ஆயிரத்து 976 ரூபா கடன் சுமை உள்ளது என தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார். கடந்த 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியின் நிதிநிலைமை குறித்த வெள்ளை அறிக்கையை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வெளியிட்டுள்ளார்.**

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவிக்கையில்,
முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் வழிகாட்டுதலின்பேரில் வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. முதலமைச்சரின் செயலாளர்கள் தெரிவித்த திருத்தங்களும் இடம்பெற்றுள்ளன. 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. அமைச்சர் பொன்னையன் வெளியிட்ட அறிக்கை, துறைவாரியாக விரிவாக இல்லை.

வெள்ளை அறிக்கையில் தவறு இருந்தால் அதற்கு நானே பொறுப்பு என்பதற்காகவே என் பெயர் இடம்பெற்றுள்ளது. எங்களின் இலக்கை தெரிவிப்பதற்காகவே வெள்ளை அறிக்கை வெளியிட்டுள்ளோம்.

தமிழகத்தில் ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் 2 லட்சத்து 63 ஆயிரத்து 976 ரூபா கடன் சுமை உள்ளது. மாநிலத்தின் கடனை செலுத்தும் தன்மை குறைந்ததால் வட்டி விகிதமும் அதிகரித்துள்ளது. கடன்களின் நிலை மற்றும் வருமானம், செலவினம் ஆகியவை எவ்வாறு மாறியுள்ளன என்பது வெள்ளை அறிக்கையில் உள்ளது. என்று தெரிவித்தார். (எ-இ)



## சோதனை ஓட்டத்தை முடித்தது விக்ராந்த்!

புதுடில்லி, ஓக.10
இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் விமானம் தாங்கி போர் கப்பலான விக்ராந்த் கப்பலின் சோதனை ஓட்டம் நிறைவடைந்துள்ளது.

இந்த சோதனை ஓட்டம் வெற்றிகரமாக இடம்பெற்றது என்றும், கப்பலின் செயல் திறன் திருப்தி அளிக்கும் வகையில் இருந்தது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 40 ஆயிரம் டன் எடையில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்த போர்க்கப்பல் 23 ஆயிரம் கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த விமானம் தாங்கி கப்பல் விரைவில் கடற்படையில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ள நிலையில் இதன் சோதனை ஓட்டம் நடைபெற்று முடிந்துள்ளது. (எ-இ)

## ராகுலின் கணக்கை முடக்கியது டுவீற்றர்!

புதுடில்லி, ஓக.10
இந்தியாவின் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தியின் சர்ச்சைக்குரிய பதிவை நீக்கிய ருவிட்டர் நிறுவனம், அவரது கணக்கைத் தற்காலிகமாக முடக்கியுள்ளது.

முடக்கப்பட்டுள்ள ராகுல் காந்தியின் ருவிற்றர் பக்கத்தினை மீட்டெடுத்து, சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ராகுல் காந்தியை , இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட ஏனைய சமூக ஊடகங்கள் வாயிலாக பின்தொடருங்கள் என இது தொடர்பாக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

புதுடில்லியில் வன்புணர்வு செய்யப்பட்டு கொல்லப்பட்ட சிறுமியின் பெற்றோரின் ஒளிப்படத்தை ராகுல் ருவிட்டர் பக்கத்தில் பதிவேற்றி இருந்தார். அதைத் தொடர்ந்தே அவருடைய ருவிற்றர் கணக்கை அந்நிறுவனம் தற்காலிகமாக முடக்கியது. (எ-இ)



## தமிழகத்தில் ஒரே நாளில் மின்தாக்கி 6 பேர் இறப்பு!

சென்னை, ஓக.10
தமிழகத்தில் மின்சாரம் தாக்கி ஒரே நாளில் 6 பேர் உயிரிழந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒருவர், தனது பேத்தியை இடுப்பில் வைத்துக் கொண்டு, வீட்டின் முன்பாக உள்ள கம்பியில் துணியை காய வைத்துள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக மின்சார கம்பியில் ஈரத்துணி பட்டதில் இருவர் மீதும் மின்சாரம் பாய்ந்துள்ளது. அவர்களின் அலறம் சத்தம் கேட்டு, காப்பாற்ற வந்த குழந்தையின் தாய் மீதும் மின்சாரம் பாய்ந்துள்ளது. மூவரும் நிகழ்விடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இதேபோன்று, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே தோட்டத்தில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்த பெண் பரிதாபமாக உயிரிழந்துள்ளார் புல் எடுப்பதற்காக தோட்டத்துக்கு சென்றபோது இந்த விபத்து ஏற்பட்டது.

பள்ளத்திவிடுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர், தனது விவசாய தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தப்போது, மேலே சென்ற மின் கம்பிகள் மீது வாழை உரைசியதில் மின்சாரம் பாய்ந்து உயிரிழந்தார்.

கடலூர் மாவட்டம் குளஞ்சாவடியை சேர்ந்த 17 வயதுடையய சிறுவன், மொட்டை மாடியில் நின்று கைபேசியில் பேசிக் கொண்டிருந்த போது, மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழகத்தில் கன மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஓக.10
நீலகிரி, கோவை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட தமிழகத்தின் 11 மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி மற்றும் வெப்ப சலனத்தால் 11 மாவட்டங்களில் கனமழையும், மேற்கு தொடர்ச்சி மலையோர மாவட்டங்களில் மிதமான மழைவீழ்ச்சியும் பதிவாகும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் மிதமான மழைவீழ்ச்சி பதிவாகும் எனவும் எதிர்வுக்கூறப்பட்டுள்ளது. (எ-இ)

# நாட்டை முடக்காவிடின் நிலைமை படுமோசமாகும்

## ஜே.வி.பி. எச்சரிக்கை

**கொழும்பு, ஓக. 10**

**கொரோனாத் தொற்று வேகமாக பரவிவரும் சூழ்நிலையில் நாட்டை உடன் முடக்கிய பின்னரே, அடுத்தக்கட்டம் பற்றி அரசு சிந்திக்க வேண்டும். பொருளாதாரத்தை முன்னிலைப்படுத்தி சுகாதாரப் பிரச்சினையை மறந்தால், அனைத்தும் தலைகீழாக மாறிவிடும் என்று ஜே.வி.பி. எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், விசேட மருத்துவருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய கொரோனா நெருக்கடி நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில் நாடு முழுமையாக முடக்கப்பட வேண்டும். தற்போது பொருளாதாரம், சுகாதாரம், கல்வி மற்றும் போக்குவரத்து என துறைகளைத் தனித்தனியே பிரித்து பார்க்க முடியாது. இவை அனைத்துடனும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டவையாகும்.

பொருளாதாரம்பற்றி மட்டும் சிந்தித்து, சுகாதாரப் பிரச்சினையை மறந்துவிடக்கூடாது. இன்று சுகாதாரம்கூட பொருளாதாரம்தான். வருமானம் உழைக்க வெளியில் செல்பவர் தொற்றாளராக திரும்பி வீட்டுக்கு வருவாரானால் 14 நாள்கள் அவருக்கு எல்லாவற்றையும் இழக்க நேரிடும். சுகாதாரப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனவே, சுகாதாரப் பிரச்சினைக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

பொருளாதாரம், சுகாதாரம் என இரண்டையும் சமநிலையில் கையாண்டால் ஒன்றுமே நடக்கப் போவதில்லை. பொருளாதாரத்தையும் மீட்க முடியாது. மக்களையும் காப்பாற்ற முடியாது.

அதேவேளை, வைரஸ் தொற்றின்போது அதனை கட்டுப்படுத்துவதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம். அதனை பெறவேண்டுமானால் மக்களுக்கு முறையாக, முழுமையாக தகவல்கள் வழங்கப்பட வேண்டும். தற்போது அரசால் வழங்கப்படும் தகவல்கள் முழுமையற்றவையாகும்.

கடந்த 13 நாள்களில் ஆயிரம் கொரோனா இறப்புக்கள் பதிவாகியுள்ளன. நாளொன்றுக்கு சுமார் 77 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்திய சனத்தொகையுடன் ஒப்பிட்டால் நாளொன்றுக்கு 5 ஆயிரம் பேர் உயிரிழக்கும் நிலைமை காணப்படுகின்றது.

எனவே, இந்தியாவில் ஏற்பட்ட நிலைமையே இங்கும் ஏற்பட்டுள்ளது- என்றார். (4,44)

# கட்டுப்பாடுகளை மீறிய பூப்புனித நீராட்டு விழா

## வீட்டின் உரிமையாளர் மீது வழக்கு

கொழும்பு, ஓக. 10

சுகாதார வழிகாட்டுதல்களை மீறி நடத்தப்பட்ட பூப்புனித நீராட்டு விழா பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வீட்டின் உரிமையாளர்மீது வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் அஹங்கம பிரதேசத்தில் நடந்துள்ளது. குறித்த நிகழ்வு நடைபெற இருந்த வீட்டில் சுமார் 50 பேர் பங்குபற்றியுள்ளனர். அவர்கள் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அத்துடன் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த விதிக்கப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளர் மீது வழக்குத் தொடப்படும் என்று பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (4)



# 12 வயதுக்கு மேல் தடுப்பூசி அவசியம்

## ரணில் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 10

12 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். நாட்டில் கொரோனா பரவல் மிக வேகமாக அதிகரித்து வருகின்ற நிலையில், நாளாந்தம் பதிவாகும் இறப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

அதேவேளை கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் சுகாதார அமைச்சின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்கப்படாமல், இராணுவத்தினரின் கண்காணிப்பில் முன்னெடுக்கப்படுவது அதிருப்தியளிக்கின்றது - என்றார். (4,22)



# கொவிட் தீவிரமானால் நாட்டை முடக்கலாம்

## பெரமுன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 10

கொரோனா நிலைமை மேலும் தீவிரமடைந்தால், நாட்டை சில நாள்களுக்கு முடக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்துள்ளார். நாட்டை முழுமையாக தற்போது முடக்குவது எளிதானதல்ல. எனினும் தொற்றிலிருந்து மக்களின் உயிரைப் காப்பாற்ற வேண்டும் என்றால் நாட்டை சில நாள்களுக்கு முடக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# ராகம மருத்துவமனையில் குவிந்துள்ள 26 சடலங்கள்

## உடன் தகனத்துக்குப் பணிப்பு

கொழும்பு, ஓக. 10

ராகம போதனா மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள கொரோனாத் தொற்றாளர்களது சடலங்களை விரைவாக தகனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இராஜாங்க அமைச்சர் நிமால் லன்சா ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதற்கமைவாக தகனம்செய்வதற்குத் தாமதமாகியுள்ள 26 சடலங்களையும் மஹர, வத்தளை, பியகம, ஜாஎல, கட்டான மற்றும் நீர்கொழும்பு ஆகிய நகரசபை மற்றும் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள தகனசாலைகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த பிரதேசங்களின் நகர சபைத் தலைவர் மற்றும் பிரேதச சபைத் தலைவர் இது தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பர். அதேவேளை தேவைப்படின் கம்பஹா மாவட்டத்திலுள்ள ஏனைய தகனசாலைகளையும் உபயோகிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (4)

# போலியான தகவலை நம்பாது விரைந்து தடுப்பூசி பெறுங்கள்

## இராணுவத்தளபதி ஆலோசனை

கொழும்பு, ஓக. 10

கொரோனாத் தடுப்பூசி தொடர்பில் உண்மைக்குப் புறம்பான தகவல்களை நம்பாது, தகுதியுடைய அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது அவசியம் என்று தொற்றுப் பரவலைத் தடுக்கும் செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசு தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை விரைவுபடுத்தியுள்ளது. மக்களுக்குத் தேவையான தடுப்பூசிகளைத் தருவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது 75 வீதமானோர் தடுப்பூசியின் ஒரு டோஸையாவது பெற்றுள்ளனர். எனவே போலியான தகவல்களை நம்ப வேண்டாம். தடுப்பூசியைப் பெற்று, கொரோனாத் தொற்றிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்- என்றார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ரயில் போக்குவரத்து முற்றாக முடங்கலாம்

*பயணிகளுக்கு எச்சரிக்கை*

கொழும்பு, ஓக. 10
ரயில் சேவையாளர்கள் பலர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இருப்பதால், எதிர்காலத்தில் ரயில் சேவைகளை முழுமையாக முடக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று ரயில் திணைக்கள பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
வைரஸ் தொற்று சடுதியாக அதிகரித்துள்ள நிலையில், பொதுப் போக்குவரத்துச் சேவையில், குறிப்பாக ரயில் போக்குவரத்துச் சேவை அவதானமிக்கதாகக் காணப்படுகின்றது.
கடந்த காலங்களை விட தற்போது அதிதீவிரமாக வைரஸ் பரவலடைந்துள்ளது. இதனால் மருத்துவத்துறைக்கும் சவால் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை தொடர்ந்தால் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். இவ்வாறான நிலையில் பொதுப் போக்குவரத்துச் சேவை தற்போது பாதுகாப்பற்ற தன்மையில் உள்ளது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளதை ஏற்றுக்கொள்கிறோம்.
பொதுப் போக்குவரத்துச் சேவையில் ரயில் சேவையை பெரும்பாலான பயணிகள் பயன்படுத்துகின்றனர். தினசரி காலை மற்றும் மாலை அலுவலக ரயில் சேவைகளை லட்சக்கணக்கான பயணிகள் பயன்படுத்துகின்றனர். எனவே பொதுப் போக்குவரத்து சேவையைப் பயன்படுத்துவது தற்போதைய நிலையில் அவதானமிக்கது என்று ஆரம்பத்தில் இருந்து குறிப்பிடப்படுகின்றது.
பயணிகள் தனிநபர் இடைவெளியைப் பேணி பயணம் செய்ய வேண்டும் என்ற காரணத்தால், இயலுமான அளவு ரயில்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்- என்றார். (ம-4)

### கொவிட்டால் இறந்தவர்களை அடக்கம்செய்ய

# மயானங்களில் கடும் நெருக்கடி

கொழும்பு, ஓக. 10

**மயானங்களில் ஏற்பட்டுள்ள கடும் நெருக்கடி காரணமாக, கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்தல் மற்றும் தகனம் செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.**




தற்போது சடலங்களைத் தகனம் செய்யவோ, அடக்கம் செய்யவோ குறித்த பிரதேசங்களில் அமைந்துள்ள மயானங்களில் இடமில்லை. அந்த மயானங்களில் கொரோனாவால் உயிரிழப்போர்களின் சடலங்கள் மாத்திரமன்றி, சாதாரணமாக உயிரிழப்போர்களின் சடலங்களும் தகனம் செய்யப்படுகின்றன. இதனால் நெரிசல் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் இரண்டு மற்றும் 3 நாள்களாக சடலங்களை மருத்துவமனைகளில் வைத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எனினும் பொலிஸாரின் தலையீட்டுடன் சடலங்களைத் தகனம்செய்ய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

## அறிகுறியற்ற தொற்றாளர்கள் வீடுகளில் கண்காணிப்புக்கு!

*புதிய திட்டம் நேற்று ஆரம்பம்*

கொழும்பு, ஓக. 10
அறிகுறியற்ற கொரோனாத் தொற்றாளர்களை வீடுகளில் தனிமைப்படுத்தி, கண்காணிக்கும் புதிய நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இதுதொடர்பான வழிகாட்டல்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால், மாகாண மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.



இந்தத் திட்டத்தில் 1390 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக 24 மணித்தியாலங்களும், நோயாளர்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
அறிகுறியற்ற, அபாய நிலை இல்லாத 2 முதல் 65 வயதுக்கு இடைப்பட்டவர்களை வீடுகளில் தனிமைப்படுத்தி, கண்காணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முன்னதாக இந்த நடைமுறை மேல் மாகாணத்தில் இருந்த நிலையில், நேற்றுமுதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (4)



## அறிவுறுத்தல்கள் மீறப்பட்டால் பஸ் சேவைகள் நிறுத்தப்படும்

*போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 10
பொதுப் போக்குவரத்துச் சேவையை முன்னெடுக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய அறிவுறுத்தல்களை மீறி, பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் செயல்படுவார்களாயின், மீண்டும் பஸ் சேவைகளை தற்காலிகமாக இடைநிறுத்தும் நிலை ஏற்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.
பஸ்களின் ஆசன எண்ணிக்கைக்கு மாத்திரம் பயணிகள் பயணிப்பது உறுதிசெய்யப்பட வேண்டும். சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைக்கு அமைவாக சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் செயற்பட வேண்டும்.
பொதுமக்களின் நலனே முக்கியமானது. அதனைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதால் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

## அரச ஊழியர்களுக்கான சுற்றறிக்கை வெளியீடு

கொழும்பு, ஓக. 10
கொரோனாத் தொற்றுக் காரணமாக, அரச நிறுவனங்களுக்கு ஊழியர்களை அழைக்கும்போது முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுகள், மாகாண பிரதம செயலாளர்கள் மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ளது.
அதற்கமைவாக அனைத்து அரச நிறுவனங்களதும் அதிகாரிகள், ஆகக்குறைந்தது வாரம் ஒன்றில் 3 நாள்கள் சேவைக்கு சமுகமளிக்கும் வகையில் குழுவொன்றை நியமித்து, அந்தக் குழுவை கடமைக்கு அழைக்க வேண்டும்.
கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் ஒரு வயதுக்கும் குறைவான பிள்ளைகளைக் கொண்ட தாய்மார்களைப் பணிக்கு அழைக்க முடியாது.
அதேவேளை நோய் அறிகுறிகளைக் கொண்டிருக்கும் அல்லது வேறெந்த நியாயமான காரணிகளால் கடமைக்கு சமுகமளிக்க முடியாதுள்ள ஊழியர்களுக்கு, வீட்டிலிருந்து பணியாற்ற அல்லது அருகிலுள்ள பணியிடம் ஒன்றில் கடமை புரியும் வசதிகளை நிறுவனத்தின் பிரதானி மேற்கொள்ள வேண்டும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிடம் அடிபணிந்தால் பிராந்தியத்தில் நெருக்கடி!

## ஐ.ம.சக்தி எதிர்வு கூறல்

**கொழும்பு, ஓக. 10**

**சீனாவிடம் உதவியைப் பெற்று அதன் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து பிராந்திய நெருக்கடிகளை எதிர்கொள்வதா என்பதை அரசே தீர்மானிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள போதிலும், அரசு இதுவரையில் சர்வதேச நாணய நிதியத்திடம் எவ்வித கலந்துரையாடல்களையும் முன்னெடுக்கவில்லை.

நாட்டில் 2.8 பில்லியன் டொலர் மாத்திரமே அந்நியச் செலாவணி இருப்புக் காணப்படுகின்றது.

தங்கத்தின் மதிப்பீட்டைக் குறைக்கும் போது 2.35 பில்லியன் டொலர் அந்நியச் செலாவணி இருப்பே எஞ்சியுள்ளது.

ஒரு மாதத்தின் இறக்குமதி செலவுக்கான இருப்பாக 1.6 பில்லியன் டொலர் மாத்திரமே உள்ளது. அரசு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதில்லை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தால், நாட்டு மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிடும்.

மக்களைப் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதற்கு அரசுக்கு ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராக உள்ளோம். அரசு அதன் தவறை உணர்ந்து செயற்பட வேண்டும். இதற்கு முன்னர் எந்தவொரு ஆட்சிக் காலத்திலும் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படவில்லை. மக்களை மேலும் மேலும் சிக்கலுக்குள் தள்ள வேண்டாம் என்று அரசை வலியுறுத்துகின்றோம். -என்றார். (ம-4)

# வெடிபொருள்கள் திருட்டு: படையினர் இருவர் கைது

கொழும்பு, ஓக. 10



வெலிசர விமானப் படை வெடிமருந்து சேமிப்பு நிலையத்திலிருந்து, வெடிபொருள்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில், விமானப்படை மற்றும் கடற்படையைச் சேர்ந்த இருவர் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கருங்கல் குவாரிகளில் வெடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் அமோனியம் நைட்ரேட் வெடிபொருள்களே திருடப்பட்டுள்ளன.

களனி குற்றப் புலனாய்வுப் பிரிவினர், புலனாய்வு நடவடிக்கைகளின் பின்னர், கடற்படை மற்றும் விமானப் படையின் உறுப்பினர்கள் இருவரையும், இரண்டு வெளிநாட்டவர்களையும் கைதுசெய்தனர்.

சந்தேகநபர்களிடம் 70 கிலோக்கிராம் அமோனியம் நைட்ரேட் மற்றும் ஒரு முச்சக்கர வண்டி ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4)

# இந்த வருடம் 1000 பாலங்கள் நிர்மாணிப்பு

கொழும்பு, ஓக. 10

'கிராமங்களை இணைக்கும் இதயத்தின் பாலம்' என்ற திட்டத்தில், இந்த வருடம் ஆயிரம் பாலங்கள் நிர்மாணிக்கப்படும் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

இநதத் திட்டத்தின் ஊடாக ஏற்கனவே 700க்கும் மேற்பட்ட கிராமப்புற பாலங்களை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் தற்போதைய கொரோனாத் தொற்று நோய்க்கு மத்தியிலும், திட்டமிட்டவாறு தடையின்றி நிர்மாணப்பணிகளை முன்னெடுக்குமாறு, வீதி அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனூடாக கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை இலகுபடுத்தி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வாய்ப்பு ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# வாகன இறக்குமதி தடை தொடரும்?

கொழும்பு, ஓக. 10

வாகன இறக்குமதிக்கான தற்காலிகத் தடை, அடுத்த ஆண்டும் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வாகன இறக்குமதிக்கான தடையின் மூலம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைச் சேகரிக்க முடிந்துள்ளது என்று கருவூல திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதனால் அடுத்த ஆண்டும் வாகன இறக்கமதிக்கான தடையைத் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அந்நியச் செலாவணி மாற்று விகிதத்தில் உள்ள இடைவெளியைக் குறைக்கும் நோக்கில், கடந்த ஆண்டு மார்ச் மாதம் வாகனங்களை இறக்குமதி செய்ய அரசு தற்காலிக தடை விதித்திருந்தது. (ம-4)

# மகனின் தாக்குதலில் தந்தை உயிரிழப்பு

திருமலை, ஓக. 10



மகனின் தாக்குதலால் படுகாயமடைந்த தந்தை, மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் திருகோணமலை பாலையூற்றுப் பகுதியில் நடந்துள்ளது.

உயிரிழந்தவர் பாலையூற்று மயான வீதியைச் சேர்ந்த 60 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 6ஆம் திகதி இரவு, வீட்டில் ஏற்பட்ட தகராறு காரணமாக மகன், தந்தையின் தலையில் பொல்லால் தாக்கி காயம் ஏற்படுத்தியுள்ளார்.

காயமடைந்த தந்தை திருகோணமலை பொதுமருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். அவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4)

# சேதன உரத்துக்கு முன் மண் பரிசோதனைக்கு

கொழும்பு, ஓக. 10

விவசாயிகளுக்கு பெரும்போகத்துக்குத் தேவையான சேதன உரத்தை வழங்குவதற்கு முன்னர், மண் பரிசோதனை நடவடிக்கைகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகும் என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படும் என்று திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

அதேவேளை சேதன உரத்தின் பயன்பாடு குறித்து விவசாய சமூகத்துக்கு தகவல் வழங்குவதற்காக, விவசாய ஆராய்ச்சி அதிகாரிகளுக்கு பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக பெரும்போகத்துக்கான உரங்களை வழங்குவதற்கு முன்பு, விவசாய நிலங்களில் மண் பரிசோதனை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சொந்தமாக நிலம் உள்ள விவசாயிகளுக்கு உர அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய பொருள்களுக்கு விரைவில் தட்டுப்பாடு ஏற்படலாம்

## இறக்குமதி அவசியம் என்கிறார் திஸ்ஸ

கொழும்பு, ஓக. 10

**கொரோனாத் தொற்று கடந்த காலங்களைவிட தீவிரமடைந்துள்ளது. எதிர்காலத்தில் அத்தியாவசிய உணவும் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுமா என்ற அச்சமும் எழுந்துள்ளது. எனவே அரசு வீண்செலவுகளைக் குறைத்து தேவையான உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனாத் தொற்று அதிகரிப்பால், மருத்துவமனைகளில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

தொற்றாளர்களின் எண்ணிக்கையும், இறப்புக்களின் எண்ணிக்கையும் தினசரி அதிகரிக்கின்றதே தவிர குறைவடையவில்லை.

தற்போது சந்தையில் எரிவாயு, பால்மா உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. உலகில் ஏதேனும் பேரழிவுகள் இடம்பெற்று நிறைவுப்பெற்றதைத் தொடர்ந்து உணவுத் தட்டுப்பாடு ஏற்படும். வரலாற்றில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. எனவே கொரோனாத் தாக்கத்தை ஒரு பேரழிவாகக் கருத வேண்டும். இதனால் ஒட்டுமொத்த உலகமும் பாதிக்கப்பட்டுள்ளது. -என்றார். (4)




# சதொசவில் சீனி திருட்டு

## முகாமையாளர் கைது

கொழும்பு, ஓக. 10

வென்னப்புவ, கொஸ்கஸ்சந்தி சதொச கிளையில் 37 மெற்றிக் தொன் சீனியைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில், கிளையின் முகாமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து புத்தளம் மாவட்ட வலய முகாமையாளர் மற்றும் வெலிசர களஞ்சிய சாலையின் பராமரிப்பாளர் ஆகியோர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களைக் கைதுசெய்வதற்காக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வென்னப்புவ கொஸ்கஸ்சந்தி சதொச கிளை, வழக்கமாக மாதத்துக்கு 4 மெற்றிக் தொன் சீனியை விற்பனை செய்கின்றது. கடந்த திங்கட்கிழமை வழமைக்கு மாறாக அதிகளவான சீனியை குறித்த முகாமையாளர் வெலிசர களஞ்சியத்தில் கோரியுள்ளார். கோரப்பட்ட அதிகளவான சீனியை ஏற்றிக் கொண்டுசென்ற லொறியில் இருந்தமொத்த சீனியும் மூன்றாம் தரப்பு லொறியில் ஏற்றப்பட்டுள்ளது.

மாற்றப்பட்ட லொறி சதொச கிளைக்கு சீனியைக் கொண்டுசெல்லாது, வேறொரு கடைக்குச் சென்றுள்ளது. இது தொடர்பில் சதொச சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, வென்னப்புவ பொலிஸில் அளித்த முறைப்பாட்டையடுத்து, முகாமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (4)

# 20ஆவது திருத்தத்தை ஆதரித்து வாக்களித்தவர்களுக்கு மன்னிப்பு

## முஸ்லிம் காங்கிரஸ் பல்டி

கொழும்பு, ஓக. 10

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மன்னிப்புக் கோரியுள்ளனர். அதனால் அவர்களை மன்னிக்கவுள்ளோம் என்று கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவுப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுதொடர்பில் அரசியல் உயர்பீடம் ஏற்கனவே தீர்மானித்து விட்டது. அவர்கள் மன்னிப்புக் கோரியுள்ளதால், மன்னிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த விவகாரம் நிறைவடைந்து விட்டது. அவர்களுடைய வேறு திறமைகளைக் கருத்தில் கொண்டு கட்சியை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டிய தேவை எமக்கிருக்கின்றது.

அதற்கான பொறுப்புக்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதனை அவர்கள் சிறப்பாகச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். -என்றார். (4)


# ஹிஷாலினின் சடலம்: இறுதி அறிக்கை தயார்

கொழும்பு,ஓக.10

டயகம சிறுமி ஹிஷாலினியின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டு, பேராதனை போதனா மருத்துவமனையில் இரண்டாவது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதன் இறுதி அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இரண்டாவது முறையாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது, பெறப்பட்ட மாதிரிகள் மேலதிக விசாரணைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளன. அதற்கமைவாக இறுதி அறிக்கை விரைவில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் பணியாற்றிய சிறுமி, தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்த நிலையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. சிறுமி பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுள்ளார் என்று கூறப்படும் நிலையில், இரண்டாவது பரிசோதனைக்கு மூவர் அடங்கிய மருத்துவ நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)



# வாயிலிருந்து வெளிவந்த இரண்டு அடியுள்ள புழு!

## 10 மாதக் குழந்தை பரிதாபமாகச் சாவு

10 மாதங்களான ஆண் குழந்தையின் மூக்கு, வாய் மற்றும் ஆசனவாயிலிருந்து சுமார் இரண்டு அடிநீளமுள்ள கொக்கிப்புழுக்கள் வெளிவந்த நிலையில், குறித்த குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் நடந்துள்ளது.

கொழும்பு லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட குழந்தையே உயிரிழந்தது.

இறப்பு விசாரணை அதிகாரி இரேஷா சமரவீர முன்னிலையில் இறப்பு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

கொக்கிப்புழு நோய் தீவிரமாக அதிகரித்ததால் இறப்பு சம்பவித்துள்ளது.

கிராண்ட்பாஸ் கெமுனு லேன் பகுதியில் உள்ள 7 பிள்ளைகளைக் கொண்ட ஏழ்மையான குடும்பத்தில் இளைய குழந்தையான பத்து மாதங்களான ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

கடந்த 5ஆம் திகதி மதியம் குழந்தையின் வாயில் இருந்து சுமார் 2 அடி நீளமுள்ள ஒரு புழு வெளியேறுவதை குழந்தையின் தாய் அவதானித்துள்ளார்.

அதையடுத்து குழந்தையை லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு குழந்தையின் மூக்கிலிருந்து மேலும் 2 அடி நீளமுள்ள இரண்டு புழுக்கள் வெளியே வந்தன. எனினும் சிகிச்சை பயனளிக்காமல் குழந்தை உயிரிழந்தது.

குழந்தை மலம் கழிக்கும்போது அவரது ஆசன வாயிலில் இருந்து இது போன்ற புழுக்கள் வெளியே வருவதை முன்பு பார்த்தேன் என்று குழந்தையின் தாயார் தெரிவித்துள்ளார்.

கடுமையான வறுமையில் உள்ள இந்த குழந்தைக்கு, சரியான சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை.

சரியான நேரத்தில் குடற்புழு நீக்கம் செய்யப்படவில்லை. ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள நிலையில், குழந்தை கடுமையான கொக்கிப்புழு நோயால் இறந்துள்ளது என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)


# முன்னாள் ஜனதிபதி சந்திரிகாவை இலக்குவைத்து குண்டுத்தாக்குதல்!

## மேன்முறையீட்டை மீளப்பெற்றார் குற்றவாளி

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை இலக்குவைத்து நடாத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பில், கொழும்பு மேல்நீதிமன்றால் அளிக்கப்பட்ட தண்டனைக்கு எதிரான மேன்முறையீட்டை குற்றவாளி ஒருவர் வாபஸ் பெற்றுள்ளார். குறித்த வழக்கில் 2ஆவது பிரதிவாதியாக முன்னிலைப்படுத்தப்பட்டு, குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட சக்திவேல் லங்கேஸ்வரன் என்பவரே, தண்டனைக்கு எதிராக தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை வாபஸ் பெற்றுள்ளார். தனது சட்டத்தரணியான சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். பஞ்சாட்சரம் ஊடாக, இது தொடர்பான விடயங்களை மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு முன்வைத்த அவர், மனுவை வாபஸ் பெற்றுள்ளார்.

இந்த நிலையில், சக்திவேல் லங்கேஸ்வரனின் மேன்முறையீட்டை தள்ளுபடி செய்த மேன்முறையீட்டு நீதிமன்று, மேல்நீதிமன்றில் குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து, விதிக்கப்பட்ட 30 வருடங்கள் சிறைத் தண்டனை, 2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி முதல் ஆரம்பிக்கும் வகையில் கணக்கிடப்படும் என்று அறிவித்தது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் ஒலிம்பிக் தொடர் கடந்த 23ஆம் திகதியில் இருந்து நேற்றுமுன்தினம் வரை நடைபெற்று முடிந்தது. டோக்கியோ ஒலிம்பிக்கின் நிறைவு விழா கோலாகலமாக முன்னெடுக்கப்பட்டது. அது தொடர்பான ஒளிப்படங்களை சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. (ம)

## முக்கிய இரு மாகாணங்கள் தலிபான்கள் கட்டுப்பாட்டில்!

காபூல், ஓக. 10

ஆப்கானிஸ்தானில் முக்கிய இரண்டு மாகாணங்கள் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன என்று ஆப்கானிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. குந்தூஸ், சர்இபோல் மாகாணங்களே தலிபான்களின் வசம் வீழ்ந்துள்ளன.

இந்த மாகாணங்கள் நிலப்பரப்பில் பெரியவை. கடந்த இரு வாரங்களாக அங்கு தலிபான்களுக்கும் அரச தரப்புக்கும் இடையே கடும் போர் நிலவியது. இந்த நிலையிலேயே மேற்படி மாகாணங்கள் தலிபான்களின் வசம் வீழ்ந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அந்த மாகாணங்களை மீட்டெடுக்க ஆப்கானிஸ்தான் படைகள் வான்தாக்குதலை ஆரம்பித்துள்ளன என்றும் ஆப்கானிஸ்தான் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (ம)



# தலிபான்களை எதிர்த்து அமெரிக்கா தாக்குதல்!

காபூல், ஓக. 10

**ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் பேரெழுச்சியைத் தடுக்கும் வகையில் அமெரிக்கா தாக்குதலை ஆரம்பித்துள்ளது. தலைநகர் காபூலுக்குள் தலிபான்களை நுழையவிடாமல் தடுப்பதற்கு போர் விமானங்களில் கண்காணிப்பு நடவடிக்கையிலும் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.**



கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருந்தது அமெரிக்கா. தலிபான்களை ஆட்சியில் இருந்து அகற்றிய அமெரிக்கா இந்த நீண்ட காலப்போரில் தலிபான்களை அழிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தபோதிலும் எதுவும் பயனளிக்கவில்லை. இந்த நிலையில் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளியேறுகின்றது. அமெரிக்கப் படைகளின் பெருமளவான சிப்பாய்கள் ஏற்கனவே வெளியேறிவிட்ட நிலையில் சொற்பமான சிப்பாய்களே தற்போது எஞ்சியுள்ளனர். இதனால் தலிபான்கள் அங்கு பேரெழுச்சி பெற்றுள்ளனர். தலைநகர் காபூலுக்குள் நுழையவும் அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் நீண்ட காலத்துக்குப் பின்னர் அமெரிக்கா தலிபான்கள் மீது தாக்குதலை ஆரம்பித்துள்ளது. தலிபான்களை காபூலுக்குள் நுழையவிடாமல் தடுக்கும் விதமாகவும் அவர்களை விரட்டும் வகையிலும் இந்தத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது என்று சொல்லப்படுகின்றது.

கடந்த மூன்று வாரங்களாக தலிபான்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்த அமெரிக்கா, தற்போது அங்கு தாக்குதலை ஆரம்பித்துள்ளமையானது புது நம்பிக்கையை ஆப்கானிஸ்தான் மக்களுக்குக் கொடுத்துள்ளது. (ம)

# வான் தாக்குதல்கள் தீவிரம் 200 தலிபான்கள் கொலை!



காபூல், ஓக. 10

ஆப்கானிஸ்தானின் நிம்ரோஸ் மாகாணத்தில் ஆப்கானிஸ்தான் அரச படைகள் மேற்கொண்ட கடும் வான்வழித் தாக்குதலில் சுமார் 200 தலிபான்கள் கொல்லப்பட்டனர் என்றும் தலிபான்களில் 75க்கும் மேற்பட்ட வாகனங்கள் அழிக்கப்பட்டன என்றும் ஆப்கானிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. குறித்த பகுதிக்குள் தலிபான்களை திட்டமிட்டு வரவழைத்து தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் இந்தத் தாக்குதலால் தலிபான்கள் நிலைகுலைந்துள்ளனர் என்றும் ஆப்கானிஸ்தான் அரசு மேலும் தெரிவிக்கின்றது. அத்துடன் நிம்ரோஸ் மாகாணத்தில் தலிபான்களுடன் நேரடி மோதலும் தீவிரமாக இடம்பெற்ற வருகின்றது என்றும் ஆப்கானிஸ்தான் அரசு மேலும் தெரிவித்தது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** மனம் நிறையும். குளிர் தேசத்திலிருந்து நல்ல செய்தி வரும். மற்றவர்களிடம் கருணை காட்டி அன்புக்குப் பாத்திரமாவீர்கள். உழைப்பால் உயர்வு வரும். மகிழ்வும் குதூகலமும் வரும்.

**இடபம்:** தகவல் தொடர்பு ஆக்கம் தரும். செலவுகள் குறைந்து நிம்மதி தரும். உழைப்பு அதிகரித்தாலும் அதற்கேற்ற ஊதியம் உண்டு. அறிவாற்றல் அதிகரிப்பதால் பயன் பெறுவீர்கள்.

**மிதுனம்:** பணியாளர்களுக்கு மேலதிகாரி கருணை காட்டுவார். தகவல் ஒன்று வந்து சந்தோச திகைப்படையச் செய்யும். சுற்றுப்புறம் உள்ளவர்களுக்கு உதவி செய்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**கடகம்:** எதிலும் நிதானமாக யோசித்து ஈடுபடுவது நல்லது. அடுப்பு மற்றும் வாகனத்தில் விழிப்புடன் செயல்படுவது அவசியம். அலைச்சல் நன்மை தரும். திடீர் லாபம் வரும்.

**சிம்மம்:** பகைவரிடம் கவனம் தேவை. சற்றே செழிப்பான சூழ்நிலை உருவாகும். பேச்சாற்றல் கூடும். பணி சிறக்கும். குடும்பத்துக்கு நன்மை நிகழும். சிறிய சாதனை செய்வீர்கள்.

**கன்னி:** பண வரவு அதிகரிக்கும். வாழ்க்கைப் போக்கி சிறு வளர்ச்சி உண்டு. கவலை தீர வழிபிறக்கும் நிம்மதி கிடைக்கும். பக்தியில் ஈடுபாடு வரும். அலைச்சலும் உற்சாகமும் கூடும்.

**துலாம்:** உங்கள் அருமையை வீட்டில் உள்ளவர்கள் உணர்வர். முக்கிய ஆசை ஒன்று இன்றைக்கு நிறைவேறும். அணிமணிகள் சேரும். நற்பெயர் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பொது நலப்பணிகளின் ஈடுபாட்டால் வரவேற்பு அதிகரிக்கும். உங்களின் செயல் ஒன்றால் குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். புகழ் அதிகரிக்கும்.

**தனுசு:** பொழுது போக்கு விஷயங்களில் ஈடுபட்டு குதூகலம் அடைவீர்கள். நெருங்கிய நண்பர்களுடன் மகிழ்ச்சியாக உரையாடுவீர்கள். ஆலோசனை கிடைக்கும்.

**மகரம்:** நிகழ்ச்சிகள் விரைவாக நிகழும். மன மகிழ்ச்சி உண்டு. புதிய சிக்கலை நீங்களே ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம். வெளிநாட்டில் இருக்கும் உறவினரால் புது வாய்ப்பு வரும்.நாள்.

**கும்பம்:** ஏகப்பட்ட செலவுகள் வந்தாலும் சுலபமாய்ச் சமாளிப்பீர்கள். பயண வாய்ப்பு வரும். மிகவும் அவசியமானால் ஏற்கலாம்.


**மீனம்:** நண்பர்களால் உங்களுக்கும் உங்களால் அவர்களுக்கும் நன்மை உண்டு. புதிதாய் ஒரு விஷயத்தில் ஈடுபாடு உண்டாகும். உங்கள் செயற்பாடுகளுக்கு நன்கு வரவேற்பு கூடும்.




# மீண்டும் மிரட்டும் லாரன்ஸ்


இயக்குநரும் நடிகருமான ராகவா லாரன்ஸ் நடிக்கும் புதிய படம் 'துர்கா' தற்போது இந்தப் படத்தின் திகில் நிறைந்த 'ஃபர்ஸ்ட் லுக்' போஸ்டரை வெளியிட்டுள்ளது படக்குழு.

திகில் த்ரில்லர் படங்களில் அதிகமாக நடித்து வரும் ராகவா லாரன்ஸ் 'முனி', 'காஞ்சனா', 'காஞ்சனா 2' மற்றும் 'காஞ்சனா 3' ஆகிய வரிசையில் மீண்டும் புதிய திகில் படத்தில் நடிக்கின்றார். இந்தப் போஸ்டரில் லாரன்ஸ் நீண்ட தாடி மீசையுடன் ஒரு பழைய தோற்றத்தில் காணப்படுகின்றார். இது ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை அதிகரிக்க செய்துள்ளது.










முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## எந்நேரமும்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டில் கொரோனா பரவல் குறித்து கவனம் செலுத்தி வருகின்றோம். கொரோனாக் கட்டுப்பாட்டுச் செயலணியில் தொடர்ச்சியாக இந்தக் காரணிகளைச் சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

ஆனால், நாட்டை முழுமையாக முடக்குவது குறித்து இன்னமும் கொரோனா செயலணிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவில்லை.

எனினும், இதற்கு முன்னரும் நாளாந்தம் மூவாயிரத்துக்கும் அதிகமான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதனையடுத்து நாட்டை முடக்குவது குறித்து ஆரம்பத்தில் தீர்மானிக்காதபோதும் இறுதிநேரத்தில் நாட்டை உடனடியாக முடக்கத் தீர்மானமும் எடுக்கப்பட்டது.

இப்போதும் அவ்வாறான நிலைமைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இன்றைய நிலைமை நாளை எவ்வாறு இருக்கும் எனக் கூற முடியாது. அவ்வப்போது ஒரு சில மணித்தியாலங்களில் தீர்மானங்கள் மாற்றப்படலாம்.

எனவே, நாட்டை முடக்குவதற்கான தேவை ஏற்படாத வகையில் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதையே நாமும் கேட்டுக்கொள்கின்றோம்" என்றார். (த-22)

## ஒரேநாளில்...

ஆண்களும், 55 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவர்களில் 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட 15 ஆண்களும், 06 பெண்களும் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்ட 41 ஆண்களும், 49 பெண்களும் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 222 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

நாட்டில் நாளாந்தக் கொரோனா சாவுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மக்கள் பேரச்சத்தில் உறைந்துள்ளனர். (த-22)

## வளர்ப்புநாய்...

வராவார்.

இவர், தனது வீட்டில் செல்லப்பிராணியான நாய் ஒன்றை வளர்த்துவந்துள்ளார். அது அண்மையில் உயிரிழந்துவிட்டது. அது இறந்த கவலையில் குறித்த குடும்பப்பெண் சுமார் 5 நாள்களாக சாப்பிடாமல் தண்ணீர் மற்றும் மென்பானம் மாத்திரம் அருந்தி வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், நேற்றுஅதிகாலை அவர் வீட்டில் மயங்கியுள்ளார். உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட போது அவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து அவரது உடலில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

மருத்துவமனையில் திடீர் இறப்புவிசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் இறப்பு விசாரணை மேற்கொண்டார். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## 35வதுபொதுப்பட்டமளிப்புவைபவம் (பகுதி II) - 2021
## பேராசிரியர் கந்தையாகுணரத்தினம் தங்கப்பதக்கம்

பேராசிரியர் கந்தையாகுணரத்தினம் தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டு 2017/2018 மற்றும் 2018/2019 இல் பட்டம் பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய. பொறியியல் மற்றும் விஞ்ஞானபீடங்களையும். வவுனியாப் பல்கலைக்கழகத்தின் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்திற்கு அனுமதிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்ட) பிரயோக விஞ்ஞான பீடத்தையும் சேர்ந்த தூய. பிரயோக விஞ்ஞானப் பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

***தகைமை:-**

எதிர்வரும் 35வது பொதுப்பட்டமளிப்பு (பகுதிII) வைபவத்தில்பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம். விவசாயம் மற்றும் பிரயோகவிஞ்ஞானத்தில் நான்குவருட இளமாணிப் பட்டம் அளிக்கப்படவிருக்கும்.முதலாம்வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்புமேற்பிரிவில் சித்தியடைந்தவர்கள் தங்கப்பதக்கத்திற்கு தகுதியுடையவராகக் கருதப்படுவர்.

***விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் ஒருமுகவரியில் இருந்துபெற்றுக் கொள்ளலாம்.**

1. உதவிப்பதிவாளர்.கல்விவிவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. பிரதிப் பதிவாளர். பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள்கிளை. வவுனியாப் பல்கலைக்கழகம்.வவுனியா.
3. பல்கலைக்கழகஇணையத்தளம்: www.jfn.ac.lk

*** விண்ணப்பப் படிவங்களைசமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும். ஏனைய சான்றிதழ்களுடன் உதவிப் பதிவாளர். கல்விவிவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை.யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் "என்னும் முகவரிக்கு 20/08/2021ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.விண்ணப்பக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பேராசிரியர் கந்தையாகுணரத்தினம் தங்கப்பதக்கத்திற்கான விண்ணப் பப்படிவம்" எனக் குறிப்பிடவும்.

* முடிவுத்திகதி: 20.08.2021 (வெள்ளிக்கிழமை)


* முக்கியகுறிப்பு:

- ஏற்கனவே 24ம் மற்றும் 25ம் திகதி மாசிமாதம் 2021 இல் நடைபெற்ற பகுதி I பட்டமளிப்புவிழாவின்போது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத்தேவை இல்லை.
- சரியான. பொருத்தமான தகவல்களை உள்ளடக்காதவையும். தெளிவற்றவையும். பூரணப்படுத்தப்படாதவையும் மற்றும் முடிவுத்திகதிக்குப்பின்னர் கிடைக்கப் பெறுபவையுமான விண்ணப்பங்கள் யாவும் கருத்திற்கொள்ளப்படமாட்டா.

**பதிவாளர்**

# மரண அறிவித்தல்

மலர்வு
10
07
1977



உதிர்வு
08
08
2021

## திரு. ஜெகநாதன் காண்டீபன்

**(அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - வாகரை)**

யாழ்ப்பாணம் 123/1 கன்னாதிட்டி வீதியை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு ஆரையம்பதி செங்குந்தா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஜெகநாதன் காண்டீபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - வாகரை) அவர்கள் கடந்த (08.08.2021) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.ஜெகநாதன் திருமதி செல்வராணி ஜெகநாதன் ஆகியோரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற திரு. சேதுபதி இராமச்சந்திரன் (ஓய்வுபெற்ற அதிபர்) திருமதி மங்கையற்கரசி இராமச்சந்திரன் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு மருமகனும், சுதர்சினி (பிரதேச செயலகம் மண்முனைப்பற்று) அவர்களின் அன்புக் கணவரும், அக்ஷதாவின் பாசமிகு தந்தையும், ஜனார்த்தனன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), ரகுராம் (லண்டன்), அகிலவாசன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சுமித்திரா தர்ஷிகா (லண்டன்),சகிலா (அமெரிக்கா), துஷ்யந்தன் (அமானா காப்புறுதி - கல்முனை), வாசுகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுரேஷ், சுரேனுகா ஆகியோரின் பாசமிகு உடன் பிறவா சகோதரனும், அனந்தவைகரி, அரிஷ்ணவன், அப்ரமேதன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், அனீஷா, அபிஷாலி, வருணேஷ், சிவனியன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், மானசிகாவின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.08.2021) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக ஆரையம்பதி பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்,

# சிறுமி கர்ப்பம் சகோதரன் கைது

வவுனியா, ஓக. 10

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நவ்வி பகுதியில் 14 வயதான சிறுமி ஒருவர் தாய்மையடைந்துள்ளார் என்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அந்தச் சிறுமி, கடந்த மூன்று நாள்களாக சுகவீனமடைந்து காணப்பட்டுள்ளார். அதனால் அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே அவர் தாய்மையடைந்துள்ளார் என்பது தெரியவந்தது. இது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். அதன்படி, கர்ப்பத்துக்குக் காரணமானவர் என்ற குற்றச்சாட்டில் அந்தச் சிறுமியின் 12 வயதான இளையசகோதரன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அந்தச் சிறுவன் தற்போது, சிறுவர் சீர்சிருத்தப்பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளார். தற்போது 'சூம்' செயலி உள்ளிட்ட தொழினுட்பங்கள் மூலமாக கற்றல் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. அதனால் சிறுவர்கள் மத்தியில் அலைபேசி பாவனை அதிகரித்துள்ளமை தவிர்க்கமுடியாததாகி விட்டது. எனினும், பிள்ளைகளின் அலைபேசிகள் தொடர்பில் பெற்றோர் கவனம் செலுத்தாமையும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற காரணமாக அமைந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-110.18)

## பகிரங்க ஏலவிற்பனை
## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
## பிராந்திய கால்நடைப் பண்ணை - அச்சுவேலி

பிரதிப்பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணத்தின் கீழ் இயங்கும் பிராந்திய கால்நடைப் பண்ணை - அச்சுவேலியில் உள்ள பின்வரும் பொருட்கள் 24.08.2021 ஆம் திகதி மு.ப 10.00 மணியளவில் பிராந்திய கால்நடைப்பண்ணை, கைத்தொழிற் பேட்டை, அச்சுவேலி எனும் முகவரியில் வைத்து ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

| No Equipment Name | Details |
|---|---|
| 1. Generator 27 kW | Model- Perkins P27 |
| 2. Generator 6.37kW | Model - Yanmar |

ஆர்வமுள்ளவர்கள் 21.08.2021 திகதியன்று மு.ப.10.00மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரையும் ஏல விற்பனைக்குரிய பொருட்களை மேற்படி முகவரியில் பார்வையிடலாம் என்பதனையும் உரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு 24.08.2021 ஆம் திகதி நடைபெறும் ஏலவிற்பனை நிகழ்வில் பங்குபற்றலாம் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர்**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்.**
**யாழ்ப்பாணம்.**

## "மருதங்கிளி" நூல் வெளியீட்டிற்கான ஆக்கங்கள் கோரல்
## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையினால் வெளியிடப்படுகின்ற "மருதங்கிளி" வருடாந்த மலருக்கான ஆக்கங்கள் கிளிநொச்சி மாவட்டத்தினை சேர்ந்த எழுத்தாளர்களிடம் இருந்து கோரப்படுகின்றது.

நிலபுல வாழ்வியல். வரலாறு. பண்பாடு. வீரம். தியாகம். போன்றவற்றை உள்ளடக்கி "நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்" எனும் கருப்பொருளில் படைப்புக்கள் அமைய வேண்டும்.

**எதிர்பார்க்கப்படும் படைப்புக்கள்**

01. கவிதைகள்
02. ஆய்வுக் கட்டுரைகள்
03. கதை
04. சிறுகதை
05. கேலிச் சித்திரங்கள்
06. வரலாற்றுக் குறிப்புக்கள்
07. செவ்விகாணல்கள்
08. புகைப்படங்கள்

**ஆக்கங்கள் அனுப்பிவைக்கப்படும் பொழுது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள்.**

01. ஆக்கங்களுடன் எழுத்தாளரின் பெயர். முகவ . தொலைபேசி இலக்கம் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.
02. படைப்புக்கள் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டதாகவோ அல்லது மொழி பெயர்க்கப்பட்டதாவோ அல்லது பிரதி செய்யப்பட்டதாகவோ அமைதல் கூடாது.
03. ஆக்கங்கள் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
04. ஆக்கங்கள் அனுப்பப்படுகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மருதங்கிளி மலர் வெளியீட்டுக்கான ஆக்கம்- 2021" என குறிப்பிடப்படல் வேண்டும்.
05. 2021.09.05ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் படைப்புக்கள் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

படைப்புக்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:-
**தலைவர். மருதங்கிளி மலர்க்குழு. கரைச்சி பிரதேச சபை. கிளிநொச்சி**
மேலதிக தகவல்களுக்கு சபையின் பொதுத் தொலைபேசி இலக்கம் 021 228 5761 றகு அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ள முடியும்

**[illegible] வேழமாலிகிதன்**
**தவிசாளர்**
**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**
09.08.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தளபதி ரணிலுக்கு சாட்டை

கொழும்பு, ஓக. 10

**கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்துக்கு, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா பதிலளித்துள்ளார்.**



கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனாத் தடுப்பு ஜனாதிபதி செயலணி மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்த ரணில் விக்கிரமசிங்க, இராணுவத்தினர் முன்னெடுக்கும் தடுப்பூசி வழங்கல் திட்டத்தையும் விமர்சித்திருந்தார்.

இந்தநிலையில், ரணில் விக்கிரமசிங்கவும் இராணுவ மருத்துவமனையிலேயே தடுப்பூசி பெற்றுக்கொண்டார் என்று இராணுவத் தளபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவத்திடமிருந்து தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட ஒருவர், நாட்டு மக்கள் தடுப்பூசி பெறுவதைப் பற்றி எவ்வாறு விமர்சிக்க முடியும்? என்றும் சவேந்திர சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

கொரோனாத் தடுப்புச் செயலணியில் ஜனாதிபதி, துறைசார் அமைச்சர்கள், மருத்துவ நிபுணர்கள் இருக்கின்றனர் என்றும், இராணுவத்தினர் தன்னிச்சையாகத் தீர்மானங்களை மேற்கொள்வதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-22)

## தெல்லிப்பழை துர்க்கைக்கு இன்று கொடி

யாழ்ப்பாணம், ஓக. 10

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பமாகி 22ஆம் திகதி வைரவர் பொங்கலுடன் நிறைவு பெறும் என ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது.

அவர்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பில், நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று நோய் காரணமாக மாவட்ட சுகாதார அதிகாரி வலி. வடக்கு பிரதேச செயலாளர், வலி. வடக்கு பிரதேசசபைத் தலைவர், மாவட்டச் செயலர் ஆகியோர் வழங்கிய ஆலோசனைக்கு அமைய சமூகப்பொறுப்புடன் மஹோற்சவ காலம் தொடர்பான நடைமுறைகளை பின்பற்றுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருவிழாக்கள் யாவும் உள்வீதியில் மட்டுமே நடைபெறும். உபயகாரர் மட்டும் உள்ளே அனுமதிக்கப்படுவர். உள்வீதியில் மட்டும் சுவாமி வீதிவலம் வருதல் இடம்பெறும். கோவில் வெளிவீதியில் தரிசிக்கவரும் பக்தர்கள் தனியாள் இடைவெளியைப் பின்பற்றி சுகாதார விதிகளைப்பேணி வழிபாடு செய்தல் வேண்டும். இயன்றவரை சிறுவர்கள், முதியோர்கள் வீட்டிலிருந்து வழிபாடு செய்யுங்கள். காவடி நேர்த்திகள், வீதிப்பிரதிஷ்டை என்பவை தவிர்க்கப்பட்டுள்ளன. வியாபார நிலையங்கள் எவையும் அனுமதிக்கப்படமாட்டாது. இயன்றவரை மிக அமைதியாக அம்பாளின் திருவிழா நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள். என்று குறிப்பிடப்பட்டுள் ளது. (த-26)

## நான்கு நாள்களுக்கே இனி தபால்சேவைகள்

கொழும்பு, ஓக. 10

கொவிட் தொற்று அதிகரித்துள்ளதால், தபால் சேவைகள் வாரத்தில் நான்கு நாள்களுக்கு மட்டும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமை ஆகிய நாள்களில் மட்டும் தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்கள் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

### ஹிஷாலினி விடயத்தின் விசாரணைத் தகவல்கள்

## ஊடகங்களுக்கு வெளியானமைபற்றி விளக்கம் கேட்டுள்ளது நீதிமன்று

கொழும்பு, ஓக. 10

ஜூட் குமார் ஹிஷாலினி என்ற சிறுமியின் உயிரிழப்பு மற்றும் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணையின் தகவல்கள் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்படுவதற்கு முன்னர் ஊடகங்களுக்கு வெளியானமை தொடர்பில் விசேட விசாரணைகளை முன்னெடுத்து அடுத்த வழக்கு விசாரணையின்போது அறிக்கை சமர்ப்பிக்குமாறும் மேலதிக நீதிவான் பொலிஸ்மா அதிபருக்கு பணித்துள்ளார். இந்த அறிக்கையை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் விசாரலணைகள் தொடர்பிலான தகவல்களை ஊடகங்களுக்கு வெளியிடுவதை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் நீதவான் பொலிஸ்மா அதிபருக்கு பணித்துள்ளார்.

இது மிகவும் சிக்கலான விசாரணை என்பதால் அது தொடர்பிலான இரகசியம் பேணப்படும் தகவல்கள் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு தேவையான உத்தரவைப் பெறுவதற்கு முன்னர் பொலிஸ் ஊடகப் பிரிவு மற்றும் ஏனைய தரப்பினர் ஊடாக ஊடகங்களுக்கு வெளியிடப்படுகின்றமையானது விசாரணைகளுக்கு இடையூறை ஏற்படுத்தும் என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸினால் முன்வைக்கப்பட்ட விடயத்தை கருத்தில்கொண்டு மேலதிக நீதவானால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்கில் தடுப்பிலுள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் மனைவி உட்பட 4 சந்தேக நபர்களையும் பிணையில் விடுவிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு மேலதிக நீதிவான் ரஜிந்திரா ஜெயசூரிய நேற்று நிராகரித்தார். சந்தேகநபர்களை எதிர்வரும் 23ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

சிறுமியின் சடலம் மீதான இரண்டாவது பிரேதப் பரிசோதனையின் அறிக்கை நீதிமன்றத்துக்கு கிடைக்கும் முன்னர் சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கினால் அவர்கள் அரசியல் மற்றும் பொருளாதார பலத்தின் ஊடாக அடுத்தகட்ட விசாரணைகளுக்கும் முறைப்பாட்டின் சாட்சியாளர்களுக்கும் இடையூறை ஏற்படுத்த சந்தர்ப்பம் ஏற்படும் என தெரிவித்த நீதிவான், சந்தேக நபர்களின் பிணைக் கோரிக்கையை நிராகரித்தார்.

ஹிஷாலினி ஜூலை மாதம் மூன்றாம் திகதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் முற்பகல் 11.20 அளவில் அவரை பரிசோதனைக்கு உட்படுத்திய கொழும்பு தேசிய மருத்துவமனையின் மருத்துவர், சிறுமி தெளிவான மனநிலையில் உள்ளார் என்று அறிக்கையில் குறிப்பிட்டபோதிலும் குறித்த மருத்துவருக்கு முன்னர் சிறுமியை பரிசோதித்த 3 மருத்துவர்கள், சிறுமி தனது பெயரை மாத்திரம் கூறக்கூடிய மனநிலையில் இருந்தார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாக திலீப பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய தற்போது வெளிநாட்டிலுள்ள குறித்த மருத்துவரிடம் வாக்குமூலம் பதிவுசெய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம் என்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் மன்றுக்கு அறிவித்துள்ளார். (த-இ)



## பலாலி அன்ரனிபுரத்தில் படகு, வலைகள் எரிப்பு

### ஐவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 10

பலாலி அன்ரனிபுரத்தில் ஐந்து மீனவர்களின் வாடி, படகு, வலைகள் என்பன நேற்றுத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின்பேரில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பலாலி பொலிஸார் தெரிவித்தனர். சுமார் 70 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் மற்றும் படகு ஒன்றும் எரிந்து அழிந்துள்ளன என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி பிள்ளைகளை பராமரிக்க 23 - 45 வயதுக்கு உட்பட்ட பெண்கள் தேவை. விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

T.P.: 076 923 7686


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

**செல்வி இராஜா காயத்திரி** அவர்களின் பாசமிகு சகோதரர்

**இராஜா ரமேஸ்குமாரன்**

அவர்கள் 29.07.2021 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரிக்கழகம்
**மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நிதிப் பிரிவில் வாகன சாரதியாக கடமையாற்றும் திரு.சி. வசந்தரூபன்

அவர்களின் பாசமிகு தாயார்

**செல்லக்குட்டி பூரணம்**

அவர்கள் 31.07.2021 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரிக்கழகம்
**மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்**

எங்கள் குல விளக்குகள் அணைந்த

## இருபத்து மூன்றாவது நினைவஞ்சலி





**செல்வி அ.இந்துமதி**
தோற்றம் 05.05.1968 மறைவு 25.07.1998

**திருமதி கி.சிவகெங்கா**
தோற்றம் 11. 04.1950 மறைவு 25.07.1998

திதி: துதியை (10.08.2021)

இரண்டு தசாப்தங்கள் கடந்தாலும்
இயற்கையின் நியதியை நினைந்து
கடல் காவு கொண்டதனை எண்ணி
கலங்கி நிற்கின்றோம்
மறைவு வாழ்வின் முடிவல்ல - அது
நினைவின் ஆரம்பம்
சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

மாறா நினைவுகளுடன்
குடும்ப உறவுகள்
ஆ.கி.அருணகிரிராசா குடும்பத்தினர்

## பதின்நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 14 . 03 . 1947



உதிர்வு 10 . 08 . 2007

**அமரர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்**
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்
ஊர்காவற்றுறை. பருத்தித்துறை)

அப்பா!
நீங்கள் எமையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு சென்று
பதினான்கு ஆண்டுகள் கடந்தாலும்
எம் உணர்வுகளிலும் நினைவுகளிலும்
என்றுமே அழியாது எம்மோடு நிலைத்திடுவீர்கள்

"தணிகை"
அல்வாய் வடக்கு,
அல்வாய்

அருவிழிகளுடன்
உங்கள் நினைவுகளை சுமந்தபடி
குடும்பத்தினர்

கொரோனா அதிகரித்துவரும் நிலையில்

# போட்டிகளை நடத்திய ச.ச.நிலையங்களுக்கு சீல்

பருத்தித்துறை, ஓக. 10

கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில் நேற்றுமுன்தினம் விளையாட்டுப்போட்டிகள் நடத்திய இரு சனசமூக நிலையங்கள் நேற்றுத் தொடக்கம் 14 நாள்களுக்கு முடக்கப்பட்டன.

பருத்தித்துறை சுகாதாரப் பகுதியினரும், பருத்தித்துறை பொலிஸாரும், கிராம அலுவலர்களும் இணைந்து குறித்த நிலையங்களை 14 தினங்களுக்கு சீல் வைத்து மூடினர்.

அத்துடன், குறித்த சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தினர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் அனுமதி பெறாமலும் பொலிஸாரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீறியும் செயற்பட்ட நிலையத் தலைவருக்கு எதிராக பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (கு-9)


**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு செங்கலகட்டு வேலையில் நன்கு அனுபவமுள்ள மேசன் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யக் கூடிய மேசன் கூலியாட்கள். Water base வேலை தெரிந்த பெயின்ரர் (Painter) தேவை.

தொடர்பு: 076 3165 734


## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**ஜோசப் பற்றிக் (ராசா)**

மறைவு : 10.08.2006

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
பதினைந்து வருடமாய் சென்றுவிட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய் விழுது இழந்து தவிக்கின்றோம்.
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்துவிட்டான் - நாங்களோ
எது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

149/2, கதித்தல் லேன்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(ய.23405) (13.17)



## வடக்கு மாகாணத்திலுள்ள பொலிஸாருக்கு எதிராக கொழும்பில் போராட்டம்

வடக்கு மாகாணத்திலுள்ள பொலிஸார் குற்றவாளிகளைக் காப்பாற்றுகின்றனர் என்று குற்றம்சாட்டிய, மக்கள் எழுச்சிக் கட்சியின் தலைவர் அருள் ஜெயந்திரன் பொலிஸாரின் அத்தகைய செயற்பாட்டுக்கு எதிராக கொழும்பில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

ஒரே நாடு ஒரே சட்டம் எனக் கூறும் ஜனாதிபதி, வடக்கில் அதிகரித்துள்ள வன்முறைக் கலாசாரத்தை கட்டுப்படுத்த வேண்டும். அத்துடன் குற்றவாளிகளை காப்பாற்ற நினைக்கும் பொலிஸாரின் செயற்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்து கவனவீர்ப்பில் ஈடுபட்டார். (கு-27)

## மரண அறிவித்தல்



**ஸ்ரீகிருஷ்ணகுமாரி (பெற்றி) இராசரத்தினம்**

ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீகிருஸ்ணகுமாரி இராசரத்தினம் (பெற்றி) நேற்று (09.08.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நல்லதம்பி இராசலிங்கம், செல்வராணி இராசலிங்கம் ஆகியோரின் அன்பு மகளும், இராசையா இராசரத்தினம் அவர்களின் மனைவியும், பிரஷாத் (Astron Ltd), பிரசன்ஜா (London), நிலக்ஷன் (Selva Hardware Pvt.Ltd) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜனனி, சுயந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷாக்சியின் பாசமிகு பேர்த்தியும், சாந்தகுமாரி, ஜீவானந்தகுமாரி, காலஞ்சென்ற பேரானந்தன், சதீஸ்குமாரி, பிரஷாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கதிர்காமநாதன், அருளம்பலம், ஜெயரவி, குணசீலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2021) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி தம்பளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் [illegible] கொள்கின்றோம்.

தொடர்புக்கு:
இ.பிரஷாத் - 077 948 5898

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது யார்?




உலக அளவில் பூனைகளுக்கான குத்துச் சண்டை போட்டி நடைபெற்றது!
அனைத்து நாட்டு பூனைகளையும் வீழ்த்தி அமெரிக்கா பூனை முன்னனியில் இருந்தது!
இந்தியா பூனை, பாகிஸ்தான் பூனை, ஜெர்மனி பூனை, ஆஸ்திரேலியா பூனை,
இப்படி அத்தனை நாட்டு பூனைகளும் அமெரிக்க பூனையிடம் அடிவாங்கி சுருண்டு கிடந்தன!
அமெரிக்கா பூனையல்லவா பாலும், இறைச்சியும் அளவுக்கு அதிகமாக உண்டு கொழுத்து கொழு,கொழுவென இருந்தது!
கடைசி இறுதி சுற்று....
இந்தச் சுற்றில் அமெரிக்க பூனையிடம் சோமாலியா நாட்டுப் பூனை மோதப்போவதாக அறிவித்தார்கள்!
பார்வையாளர்களுக்கு வியப்பு!
சோமாலியா நாட்டு பூனை நோஞ்சானாக மெலிந்து நடக்கவே தெம்பற்று தட்டுத்தடுமாறி முக்கி முணங்கி மேடையேறியது!
இதுவா அமெரிக்க பூனையிடம் மோதப் போகிறது! பார்வையாளர்கள் கேலியும் கிண்டலுமாய் சிரித்தார்கள்!
போட்டி தொடங்கியது!
அமெரிக்கா பூனை அலட்சியமாக சோமாலியா பூனையின் அருகில் நெருங்கியது!
சோமாலியா பூனை முன்னங்காலை சிரமப்பட்டு தூக்கி பறந்து ஒரேஅடி!
அமெரிக்க பூனைக்கு மண்டைக்குள் ஒரு பல்பு பளீச் என்று எரிந்து படாரென வெடித்து சிதறியது!
கண்கள் இருண்டு மயங்கி சரிந்தது.
பார்வையாளர்கள் அதிர்ச்சியில் வாயடைத்து நின்றார்கள்!
சற்று நேரம் சென்றபின், மெதுவாக கண்விழித்து பார்த்த அமெரிக்கா பூனைக்கு ஒன்றுமே புரியவில்லை!
சோமாலியா பூனையின் கழுத்தில் தங்கப்பதக்கம் தொங்கியது.!
போட்டியில் வென்றதற்காக சோமாலியா பூனையை எல்லோரும் கைகுலுக்கி பாராட்டிக் கொண்டிருந்தார்கள்!
மெதுவாக எழுந்து சோமாலியா பூனையின் அருகில் சென்று இத்தனை நாட்டு பூனைகளை வீழ்த்திய பலசாலியான என்னை நோஞ்சான் பூனையான நீ வீழ்த்தியது எப்படி?
என்று கேட்டது அமெரிக்க பூனை!
அமெரிக்கா பூனையின் காதில் மெதுவாக சோமாலியா பூனை சொன்னது!
நான் பூனையே இல்லை.!
புலி...டா...!
என் நாட்டு பஞ்சத்தில் இப்படியாகி விட்டேன்! பாலும்,கறியும் உண்டாலும் பூனை பூனை தான்! பட்டினி கிடந்தாலும் புலி புலிதான்- என்றது.

## அப்துல்கலாம் பொன்மொழிகள்

- செயலில் வெற்றிபெற, இலக்கை நோக்கிய ஒரே எண்ணத்துடனான முழு ஈடுபாட்டினை நீங்கள் கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும்.
- அறிவியல், மனித இனத்துக்கான ஒரு அழகான பரிசு- நாம் அதை சிதைத்துவிடக்கூடாது.
- கவிதை என்பது அதிகப்படியான மகிழ்ச்சி அல்லது ஆழ்ந்த வருத்தத்தில் இருந்து வருகின்றது.
- மேலே செல்வதற்கு வலிமை தேவைப்படுகிறது; அது எவரெஸ்ட் சிகரத்துக்கு என்றாலும் அல்லது வாழ்க்கையின் உயரத்துக்கானாலும்.
- யார் கடினமாக உழைக்கின்றார்களோ, அவர்களுக்கே கடவுள் உதவி செய்கிறார் என்ற கொள்கை மிகவும் தெளிவானது.
- மாணவர்களுக்கான மிக முக்கியமான பண்புகளில் ஒன்று கேள்வி கேட்பது

## சீனா





சீனா ஆசியா கண்டத்தின் கிழக்கில் அமைந்துள்ளது. இதன் தலைநகர் பெய்ஜிங் ஆகும்.
சீன வரலாறு, சீனாவின் கலாச்சாரம்,அறநெறி, ஆட்சி ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது.
5000 ஆண்டுகளுக்கு மேலான பழைமையான வரலாறு கொண்ட சீனா சிறப்பான பண்பாடு மற்றும் நாகரிகம் கொண்டதாகும்.
சீன நாகரிகமனது கற்காலம் தொடங்கி மஞ்சள் ஆறு, யாங்சி பள்ளத்தாக்கைச் சார்ந்த பல்வேறு பிராந்திய மையங்களில் உருவாகியிருந்தாலும், 'மஞ்சள் ஆறு' சீன நாகரிகத்தின் தொட்டில் எனக் கூறப்படுகிறது. உலகில் சனத்தொகை கூடிய நாடுகளில் முதலிடம் வகிக்கிறது.
சீனப் பெருஞ்சுவர் இந்நாட்டின் இயலுமையையும் தொன்மையையும் கூறி நிற்கிறது.
இன்று மக்கள் சீனக் குடியரசு உலகின் மிகமுக்கியமான நாடும், வளர்ந்துவரும் வல்லரசும் ஆகும். சீனா, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிலையான உறுப்புரிமையைக் கொண்டுள்ளதுடன், உலக வணிக நிறுவனம், ஆசியா-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனம், கிழக்காசிய உச்சிமாநாடு, சாங்காய் ஒத்துழைப்பு நிறுவனம், ஆகியவற்றிலும் உறுப்பினராக உள்ளது. இது ஒரு அணுவாயுத நாடாக இருப்பதுடன், உலகின் மிகப்பெரிய, நிலையான பாதுகாப்புப் படையையும் கொண்டுள்ளது.
சீனாவின் கிழக்கில் வட கொரியாவும் வடக்கில் மங்கோலியாவும் உள்ளன. வடகிழக்கில் ரஷ்யா, வட மேற்கில் கசக்ஸ்தான், கிர்கிஸ்தான், தாஜிகிஸ்தான் ஆகிய நாடுகள் அமைந்துள்ளன. மேற்கிலும் தென் மேற்கிலும் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளும் தெற்கில் மியன்மார், லாவோஸ், வியட்நாம் ஆகிய நாடுகளும் உள்ளன. கடலுக்கப்பால் கிழக்கிலும் தென்கிழக்கிலும் தென் கொரியா, ஜப்பான், பிலிப்பைன்ஸ், புருனை, மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகள் உள்ளன. சீனாவின் நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு மலைப்பாங்கான நிலமாகும்.

## ஆங்கிலம் கற்போம்



தலை
Head



கால்
Leg



முகம்
Face



கண்
Eye



நாடி
Chin



உதடுகள்
Lips



விரல்
Finger



Teeth
பற்கள்



தலை முடி
Hair

## ரோஜாப் பூ



அழகாய் இருக்குது ரோஜாபூ!
அருகே வந்து பாருங்கள்!
பழுத்தபழம் போல் தெரிகிறது
பார்த்து மகிழ வாருங்கள்!

பட்டுப்போல இருக்கிறது!
பறிக்க ஆசை துடிக்கிறது!
'எட்டி நின்றே பார்' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டைவிட்டு...

இவ்வாறு, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் பொதுமக்களுக்கு அவசர அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு அவசர எச்சரிக்கை விடுத்தார்.

வடக்கில் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் இறப்பும் அதிகரித்துவரும் நிலையில், அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்று பரவலானது அதிகரித்துள்ளது. குறிப்பாக மேல் மாகாணத்தை பொறுத்தவரை இறப்புகள் மற்றும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. அதிலும் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை சில வாரங்களாக நோய் அறிகுறிகளுடன் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றார்கள். இது ஓர் ஆபத்தான விடயம். எனவே பொதுமக்கள் அத்தியாவசிய தேவை தவிர்த்து வீட்டைவிட்டு வெளியே வராதீர்கள்.

சுகாதார அமைச்சு, சுகாதாரத் திணைக்களம் என்பன ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளன.

வடக்கு மாகாணத்திலும் இந்தத்தொற்று இன்னும் சில நாள்களில் மோசமான நிலைமையை உருவாக்கும். அந்தளவுக்கு அபாயகரமான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

**சிகிச்சை நிலையங்கள் நிரம்பிவிட்டன**

வடக்கு மாகாணத்தில் உள்ள ஒன்பது கொரோனா இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்களும் நிரம்பிக் காணப்படுகின்றன. அத்தோடு கொரோனா நோயாளர்களை பராமரிக்க ஏற்படுத்தப்பட்ட மருத்துவமனை விடுதிகளும் நிரம்பிக் காணப்படுகின்றன.

**ஒன்றுகூடலைத் தவிருங்கள்**

எனவே, பொதுமக்கள் வீட்டைவிட்டு வெளியே வராதீர்கள். யாழ்ப்பாண மாவட்டத்தை பொறுத்தவரை ஒன்றுகூடல்கள் அதாவது இந்துக் கோவில்களில் நடத்தப்பட்ட நிகழ்வுகளின் காரணமாக பல தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எனவே, எதிர்வரும் காலத்தில் இவ்வாறான ஒன்றுகூடல்கள் மற்றும் நிகழ்வுகளை தவிர்த்து பொதுமக்கள் வீடுகளில் இருத்தல் சிறந்தது.

**வடக்கில் சாவும் எகிறும்**

மேல் மாகாணத்தில் தற்போது இறப்பு வீதம் அதிகரித்துள்ளது. அதே நிலைமை வடக்கு மாகாணத்திலும் இனி வருங்காலத்தில் ஏற்படலாம். எனவே பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுதல் மிகவும் அவசியமாகும்.

**வடக்கில் 9 நாள்களில் 115 தொற்றாளர்கள்**

இன்றைய நிலைவரத்தின்படி, வடக்கில் இந்தமாதம் இதுவரை ஆயிரத்து 115 பேர் புதிய கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டிருக்கின்றனர். யாழ்ப்பாணம் 544, மன்னார் 141, வவுனியா 215, முல்லைத்தீவு 54, கிளிநொச்சி 161 என தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

**வடக்கில் 197 சாவு**

இந்தநோய் ஆரம்பித்த காலத்திலிருந்து வடக்கு மாகாணத்தில் நேற்று வரை 13 ஆயிரத்து 500 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 197 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பதிவாகியுள்ளது. அதன்படி யாழ்ப்பாணம் 151, மன்னார் 10, வவுனியா 24, முல்லைத்தீவு 8, கிளிநொச்சி 4 என இறப்புக்கள் பதிவாகியுள்ளன.

**5 லட்சம் தடுப்பூசிகள் வடக்கில் வழங்கப்பட்டன**

வடக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட 5 லட்சத்து 09, ஆயிரத்து 324 பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்றாம் கட்டமாக முதல் டோஸ் தடுப்பூசி வழங்கும் பணிகள் கடந்த சனிக்கிழமை வரை தொடர்ச்சியாக நடைபெற்றன. இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2 லட்சத்து 66 ஆயிரத்து 563 பேரும் கிளிநொச்சியில் 57 ஆயிரத்து 152 பேரும் முல்லைத்தீவில் 50 ஆயிரத்து 577பேரும் மன்னாரில் 54 ஆயிரத்து 242 பேரும், வவுனியாவில் 80 ஆயிரத்து 770 பேரும் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டனர்.

வடக்கில் 30 வயதுக்கு மேற்பட்ட 77 வீதமானவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டிருக்கின்றது. மிகுதி 23 வீதமானவர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது.

**பொது இடங்களுக்குச்செல்ல தடுப்பூசி அட்டை கட்டாயம்**

எதிர்காலத்தில் மருத்துவமனைகள், பொது இடங்களுக்குச் செல்லும்போதும் பொதுப் போக்குவரத்தில் பயணிக்கும்போதும் தடுப்பூசி அட்டையைக் கொண்டுசெல்வது கட்டாயமாக்கப்படும். உலக நாடுகளில் இந்த நடைமுறை காணப்படுகின்றது. எமது நாட்டிலும் இதை நடைமுறைப்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்கள் அனைவரும் உடனடியாக தடுப்பூசி பெற்றுக் கொள்ளுங்கள்.

இரண்டாம் கட்டமாக முதல் டோஸ் பெற்றவர்களுக்கு இரண்டாவது டோஸ் வழங்கும் பணிகள் வடக்கில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான தடுப்பூசிகள் இன்றும் நாளையும் வழங்கப்படும்.

**புதிய திட்டத்துக்கு பயிற்சி தேவை**

தொற்றுநோய் உறுதிப்படுத்தப்பட்ட நோயறிகுறியற்ற தொற்றாளர்களை அவரவர்களின் வீட்டிலேயே வைத்து சிகிச்சை அளிக்கின்ற திட்டம் மேல் மாகாணத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அந்தத் திட்டத்தை சுகாதார அமைச்சு ஏனைய 8 மாகாணங்களுக்கும் விஸ்தரிக்க முடிவு எடுத்திருக்கிறது. வடக்கு மாகாணத்துக்கும் இந்தத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

அது இந்தவாரம் நடைமுறைப்படுத்துவதாக இருந்தது. ஆனாலும் தற்போதுள்ள சூழ்நிலையில் பிற்போடப்பட்டுள்ளது. இந்த கண்காணிப்புப் பொறிமுறை சம்பந்தமாக சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு ஆரம்பகட்ட பயிற்சி வழங்கப்பட வேண்டும். அந்தப்பயிற்சியின் பின்னர்தான் வீடுகளில்வைத்து தொற்றாளர்களை பராமரிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். மருத்துவமனை விடுதிகளை விஸ்தரிப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்.

அத்தியாவசிய தேவைக்கு வெளியே செல்பவர்கள் குறிப்பாக வயது முதிர்ந்தவர்கள், கர்ப்பிணிகள், வேறு நோயாளர்கள் [illegible] மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். வித்தியாசமான நோயறிகுறிகள் இருந்தால் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்குச்சென்று சோதனை செய்து கொள்ள வேண்டும். என்றார். (த-26)

## ஒரு மாதத்துக்கு...

தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஊடகங்களிடம் நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கொரோனாத் தொற்றுக்கு எதிராகத் தடுப்பூசி பெறாதவர்கள் இருந்தால் முடிந்தளவு விரைவில் அதனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மூன்றாவது தடுப்பூசியும் விரைவில் வழங்கப்படலாம். கொரோனாவால் தற்போது அதிகமாக உயிரிழப்பவர்கள் 60 வயதுக்கு மேற்பட்ட தடுப்பூசி பெறாதவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இதுவரையில் இராணுவத்தினரால் கொழும்பு விகாரமஹாதேவி பகுதியில் அஸ்ட்ரா செனெகாவின் இராண்டாவது தடுப்பூசியும், சினோபோர்ம் முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசியும் வழங்கப்படுகின்றது.

இதனால் மக்கள் முடிந்தளவு வேகமாகத் தடுப்பூசி நிலையங்களுக்குச் சென்று தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுங்கள். அதன்போதும் சுகாதாரப் பிரிவு வழங்கும் ஆலோசனைகளை உரிய முறையில் பின்பற்றுங்கள்" என்றார். (த-22)

## நாட்டை...

சிசனுக்குத் தட்டுப்பாட்டு ஏற்பட்டுள்ளது. எனவே, உடனடியாகப் பயணத்தடையை நடைமுறைப்படுத்தி மக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தாவிட்டால் இந்தியாவைப் போன்றதொரு மோசமான நிலைமை இலங்கையிலும் உருவாகும்." இவ்வாறு இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறித்த உண்மையான நிலைமைகளோ அல்லது டெல்டா வைரஸ் பரவலின் தன்மைகள் குறித்து சுகாதார தரப்பினரால் சரியான தரவுகளையோ முன்வைக்க முடியாதுள்ளது. எழுமாறான தீர்மானங்களைக்கொண்டு நடைமுறைப்படுத்த நினைக்கும் முயற்சிகள்கூட இறுதியாகப் பாரதூரமான முடிவுகளை வெளிப்படுத்தும். கொழும்பு அல்லது மேல் மாகாணத்தைப் பொறுத்தவரையில் மிக அச்சுறுத்தலான நிலை காணப்படுகின்றது.

இன்று மருத்துவமனைகளில் உள்ள ஏனைய நோயாளர்கள் அனைவரையும் வீடுகளுக்கு அனுப்பிவிட்டு முழுமையாகக் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்காக மருத்துவமனைகளை நடத்தவேண்டியநிலை உருவாகி வருகின்றது. எனவே, மக்களின் அநாவசிய நடமாட்டங்களுக்கு இனியும் இடமளித்தால் நிச்சயமாக இந்தியாவின் நிலையை இங்கும் எதிர்கொள்ள நேரிடும்.

ஆகவே, உடனடியாகப் பயணத்தடையை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை மட்டுமல்லாது மாவட்டங்களுக்கு இடையிலும் பயணத்தடையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். இயலுமானால் இரண்டு வாரங்கள் தொடர்ச்சியாக முழுமுடக்கத்தை அறிவித்து நிலைமைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது சிறந்தது" என்றார். (த-22)

## வல்வெட்டித்துறை...

கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுத் தொடக்கம் உடல்நிலை பாதிக்கப்பட்ட அவருக்கு பொதுச் சுகாதார பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட அதிவிரைவு அன்டிஜென் பரிசோதனையில் கொவிட்19 நோய்த்தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-26)

## ஆசிரியர்களின்...

பரிந்துரைகளை முன்வைப்பதற்குமென 4 பேர் கொண்ட அமைச்சரவை குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை குழுக் கூட்டத்தின்போது குறித்த அமைச்சரவை குழு நியமிக்கப்பட்டதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அதன்படி, குறித்த குழுவில் அமைச்சர்களான விமல் வீரவன்ச, பிரசன்ன ரணதுங்க, மஹிந்த அமரவீர மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோர் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## குளவிகொட்டி...

இந்தச் சம்பவம், தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் இடம்பெற்றது. சம்பவத்தில், விசுவமடு 12ஆம் கட்டை குமாரசாமிபுரம் பகுதியைச் சேர்ந்த கதிரேசு செல்வரத்தினம் (வயது 64) என்பவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை அவர் குளவிக்கொட்டுக்கு இலக்கானார். எனினும், அன்றையதினம் மருத்துவமனைக்குச் செல்லவில்லை. அவரது உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டதால், நேற்றிரவு அவர் தருமபுரம் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார். எனினும், அவர் உயிரிழந்துவிட்டார் என்பது பரிசோதனையில் தெரியவந்தது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் விசாரணைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. தருமபுரம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-316)

## கொரோனாவால்...


சேர்ந்த 65 வயதுடைய ஆண் ஒருவரும் நாவற்குழியைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவரும் உரும்பிராயைச் சேர்ந்த பெண் ஒருவருமாக மூவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தனர்.

அத்துடன், அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். மேலும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 61 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொவிட்19 நோய்த்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்19 நோய்த்தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 153 ஆக உயர்வடைந்துள்ளது. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## கைமாறியது ஒலிம்பிக் தொடர் உரிமம்

# வானில் விமானங்கள் வண்ணமிட பரிஸில் ரசிகர்கள் கூடி குதூகலம்

### ஈபிள் கோபுரத்தில் கொடியேற்றல் குழப்பமான வானிலையால் ரத்து!

பரிஸ், ஓக. 10

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளின் நிறைவில் நேற்று ஒலிம்பிக் கொடி பரிஸ் நகர மேயர் ஆன் கிடல்கோவிடம் கையளிக்கப்பட்டது. சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் தோமஸ் பெச் ஒலிம்பிக் கொடியை டோக்கியோ ஆளுநர் யூரிகோ கொய்க் கேயிடம் இருந்து வாங்கி பாரிஸ் மேயரின் கைகளில் கொடுத்தார்.

அடுத்த ஒலிம்பிக் போட்டிகளுக்கான முழுப் பொறுப்பும் பரிஸ் வசம் கைமாறியிருப்பதைக் குறிக்கின்ற கொண்டாட்ட நிகழ்வுகள் நேற்று ஈபிள் கோபுரச் சூழலில் நடைபெற்றன. டோக்கியோவில் இருந்து பதக்கங்களுடன் திரும்பிய வீரர்கள் உட்படப் பல நூற்றுக்கணக்கான ரசிகர்கள் நகரில் நிறுவப்பட்ட ஒலிம்பிக் கிராமத்தில் ஒன்று திரண்டு ஆர்ப்பரித்தனர்.

அச்சமயம் விமானப்படையின் அணிவகுப்பு விமானங்கள் வானில் பறந்து தேசியக் கொடியின் மூவர்ணங்களை உமிழ்ந்தன. அதிபர் மக்ரோன் சிறுவர்கள் இளம் விளையாட்டு வீரர்கள் சகிதம் ஈபிள் கோபுரத்தின் முதல் தளத்தில் தோன்றுகின்ற வீடியோப் பதிவு ஒன்றைத் தொலைக்காட்சிகள் ஒளிபரப்பின. அந்த வீடியோவில் 'உயர்வாக வேகமாக வலுவாக ஒற்றுமையாக' என்ற வார்த்தைகளை மக்ரோன் பிரெஞ்சு மொழியில் உரத்த குரலில் எழுப்பினார்.

ஒலிம்பிக் போட்டிகள் சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் பாரிஸில் நடத்தப்படவுள்ளன. அதற்கான முழு ஏற்பாடுகளும் களைகட்டத் தொடங்குகின்ற ஓர் ஆரம்ப நாளாக இந்தத் தினம் அமைந்துள்ளது. கடைசியாக 1924ஆம் ஆண்டில் பரிஸ் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தியிருந்தது.

பரிஸ் மேயரிடம் ஒலிம்பிக் கொடி கையளிக்கப்பட்ட சமயத்தில் ஈபிள் கோபுரத்தில் பிரமாண்டமான ஒலிம்பிக் கொடி ஒன்றைப் பறக்கவிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் சுமார் 5 ஆயிரத்து 800 சதுர அடி அளவு கொண்ட ஓர் உதைபந்தாட்டத் திடலின் பரப்புக்குச் சமனானஅந்தக் கொடியை கோபுரத்தின் உயரத்தில் ஏற்றுவது கடைசி நேரத்தில் நிறுத்தப்பட்டது.

பரிஸில் நேற்று நிலவிய காற்றுடன் கூடிய வானிலை காரணமாகவே ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட அந்தக் கொடியைப் பறக்க விடுவது ரத்துச் செய்யப்பட்டதாகப் பரிஸ் ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழு தெரிவித்திருக்கிறது. பிரான்ஸில் இம்முறை கோடை விடுமுறைக் காலத்தில் லேசான குளிர், மழைக் காலநிலையும் அயல் நாடுகளில் வெப்ப அனல் மற்றும் காட்டுத் தீ அனர்த்தங்களுமாக ஐரோப்பாவில் மிகவும் குழப்பமான வானிலை நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வாழ்க்கை தந்தது பார்சிலோனாவே

### மெஸ்ஸி உருக்கம்



**பார்சிலோனா, ஓக. 10**

**எனக்கு வாழ்க்கை தந்தது பார்சிலோனா கழகம்தான் என்று தனது பிரியாவிடை உரையில் தெரிவித்துள்ளார் அந்த அணியின் முன்னாள் தலைவரான மெஸ்ஸி.**

13 வயதில் பார்சிலோனாவுக்காக விளையாட இணைந்த மெஸ்ஸி 21 ஆண்டுகாலப் பயணத்தின் பின்னர் தற்போது அந்தக் கழகத்தை விட்டு வெளியேறுகின்றார். நேற்று முன்தினம் மெஸ்ஸிக்குப் பிரியாவிடை இடம்பெற்றது. அதிலேயே மெஸ்ஸி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

என் வாழ்நாளில் இப்படி ஒரு நாள் வரும் என நினைக்கவே இல்லை. இந்த 21 ஆண்டுகாலப் பயணம் முடிவடைவது குறித்து எனக்கு என்ன சொல்வது என்றே வார்த்தைகள் வரவில்லை. கழகத்துக்குள் இணைந்த முதல் நாளில் இருந்து கடைசி நாள் வரை என்னால் முடிந்த அனைத்தையும் செய்திருக்கிறேன்.

ஆனால் அணிக்கு பிரியாவிடை சொல்வேன் என்று நினைத்துப்பார்க் கவே இல்லை. எனக்கு வாழ்க்கையை தந்தது இந்த அணி.

அதனால் தற்போது விடைபெறுவது மிக கடினமாக உள்ளது. நான் மனதளவில் இதற்கு தயாராக இல்லை.

வாழ்க்கையை மாற்றும் யதார்த்தத்தை நான் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. இருந்தாலும் நாம் அதை ஏற்றுக்கொண்டு முன்னேற வேண்டும். என்றார். (ம)

**யாழ்ப்பாணத்தில் உடனடி வேலை வாய்ப்பு**

R.I.B Group Pvt LTD. நிறுவனத்தில் விற்பனைப் பிரதிநிதி (அனுபவம் தேவை).
உரிய ஆவணங்களுடன் நேர்முகத்தேர்விற்கு சமுகமளிக்கவும்.

திகதி - 11/08/2021 புதன்கிழமை
நேரம் - காலை 10.00
இடம் - காதீஅபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்

T.P - 0773883879 / 0771389356

## மரண அறிவித்தல்

தோற்றம்
15
07
1960



மறைவு
09
08
2021

### நமசிவாயம் சிவகுமார்

**கள்ளித்தெரு தங்கோடை காரைநகர், உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு**

காரைநகர் கள்ளித்தெரு தங்கோடையை பிறப்பிடமாகவும் ASC முன்பாக உடையார்கட்டு வடக்கு உடையார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சிவகுமார் அவர்கள் நேற்று (09.08.2021) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவநேஸ்வரியின் பாசமிகு கணவரும், கஸ்தூரி, கணநாதன் (கொமர்ஷல் வங்கி முள்ளியவளை), கணபாலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாம்பவியின் (கிராம அலுவலர் J/101) அன்பு மாமனாரும், சிவமணி, சிவராசகுமார் (கனடா), சிவஞானகுமார் (இலண்டன்), சிவனருட்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகரட்ணராஜா, நிர்மலாதேவி (கனடா), வத்சலா (இலண்டன்) அரியமலர் (ஆசிரியை- காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயம்), தவராசா (ஆசிரியர்- யா/ புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி), சிவரஞ்ஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயமாலினி, சிவநாதன் (நாதன் அரைக்கும் ஆலை, உடையார்கட்டு) ஆகியோரின் உடன்பிறவாத சகோதரரும், சிவரூபி, கோபிதா, ரேவதி பாலகீர்த்தனா, கஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜன், ஜனனி, அங்கஜன், அனந்தன், ரஜீவன், ரதீஸ் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2021) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உடையார்கட்டு வடக்கு வெள்ளப்பள்ளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ASC முன்பாக, உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு.

தகவல்: குடும்பத்தினர்,
077 191 9330
077 119 3421

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10. 08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.